மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

1-5-53. வெள்ளிக்கிழமை 3 4

'மன்றம்' மலர்ந்தது!

மணமுள்ள மலர்! அதனைத் தேடி யெடுத்து விற்போர் அதிகம் இல்லை!

காகிதப் பூ! அதற்கு வண்ணம் பூசி, வாசனை தடவி, கடைவீதியில் விற்கப்படுகிறது, ஏராளமாக!

முற்போக்குக் கருத்துக்களைப் பரப்பவும், ...ட்டிலே எழுந்துள்ள புத்துணர்வை வளர்க்...ம் பாடுபடும் ஏடுகள் மிகச்சில. பழமையின் ...த்தைப் பாதுகாக்கவும், முடியுமானால் மேற்...ண்டு ஆதரவு தேடவும் பத்திரிக்கைகள் ...மாக இருக்கின்றன.

முல்லை மலர் எளிதிலே கிடைப்பதில்லை. பாத்தி யெடுத்து, பண்படுத்தி, பதியம் வைத்துப் பல நாள் பாடுபட்டபின்தான் மலர் கிடைக்கிறது. ஆனால் காகிதப் பூவைச் சுலபத்திலே செய்து விடலாம். விற்காவிட்டால் கூட நஷ்டம் கிடையாது.

நம் கழகத்துக் கொள்கைகளைப் பரப்புவது, முல்லை மலரை உண்டாக்கித் தருவது பே... அந்த வேலை கடினமானதுதான். மற்றவ... "நமக்கேன் இந்தத் தொல்லை" என்று ஒது...கப்பட்ட கொல்லை; அங்கு வசதிகளற்ற இடம், பணம் என்னும் தண்ணீர் சரியாகக் கிடைப்பதில்லை. வேலையின் போது கையிலே முள் தைக்கும், காலில் கல் தட்டும், தேனீக்கள் கொட்டும், அதிகாரமெனும் எருமை தோட்டத்தினுள் புகுந்து செடிகளை ந...செய்யும்! தோட்டத்தை நோக்கிக் கொ...யெனும் கோடையும், வசையெனும் மாரியும் நம் மீது தாக்கும். எல்லாவற்றையும் தா... கொண்டு, பொறுமையே வேலியாக, ...வையே தண்ணீராக, ஒடிந்த கொத்து... உடைந்த மண்சட்டியுடன் செடிகளைப் ... காக்கவேண்டியிருக்கிறது. ஆனால் பாடுப...தற்கான பலன் கிடைக்காமற் போகா... முல்லைமலர்கிறது, நறுமணம் வீசுகிறது. ...மணத்தைத் தெரிந்து கொண்டவர்கள் ... காகிதமலரை நாடுவதில்லை. நமது முன்னேற்... கொள்கைகளைத் தெரிந்து கொண்டவர்... பின் பிற்போக்குக் கருத்துக்களை நாடுவதில்...

1948-ல் 'மன்றம்' ஆரம்பிக்கப்பட்டு, தொல்லைகளினாலும், பல நெருக்கடிகளினா... இடையில் நிறுத்தப்பட்டது. மீண்டும் வெ... வருகிறது, அறிஞர் அண்ணா, நடிப்புப்புல... ராமசாமி, கோவைக் கழகத்தினர், மற்றும் தோழர்கள் தந்த ஆதரவால். உதவி செய்த...களுக்கு எமது நன்றி.

"மன்றம்" நோக்கி வருவோர்க்கு ஜரி... மாலைகளைப் போட்டு எங்களால் வரவேற்க மு...யாது. முல்லை மலர் கொடுத்து வரவேற்கிறோ... எங்கள் முன்னேற்றக் கொல்லையில் மலர்... மலர்கள் அவை.

காகிதப் பூ செய்வோருக்கு வசதிக... ஏராளம். கண்ணாடிக் காகிதங்கள், க... கவரும் வண்ணங்கள், அதிகாரத்தின் ஆதர... "அவாளின்" ஆசி எல்லாம் கிடைக்கு... நமக்கு நாமேதான் ஆதரவு. அந்த வகையி... "மன்றம்" நம் கழகத்தின் ஆதரவில், தோ...களின் ஆதரவில், நம்மிடையே நிலவும்; தோ...மையின் ஆதரவில் நிற்கிறது!

நண்பர்கள் அளிக்கும் ஒத்துழை... ஊக்கமும் ஆக்கமும் பயக்குமாதலா... "மன்றம்" ஒளிவிட்டு வீச, எல்லாவித உத...களையும் உவந்தளிக்க வேண்டும் என அ...பர்கள் அனைவரையும் வேண்டிக் கொள்கிறோ... மகிழ்ச்சியும், வணக்கமும், நன்றியும் உரியவா...

ரயி... ...நிறைந்து ஒரு நூற்றாண்டு ஆகிறது. அதற்கான விழா அண்மையில் கொண்டாடப்பட்டது.

நீராவி எழுந்தால், பானையின்மேல் மூடப்பட்டிருக்கும் மூட்டு தள்ளப்படுகிறது என்ற சிறு உண்மையிலிருந்து எழுந்த விஞ்ஞான ஆராய்ச்சிகளின் பலனாய், மணிக்கு நூறு மைல்களுக்கு மேல் செல்லும் நீராவி இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

இந்தியாவில் ரயில் ஓட ஆரம்பித்து ஒரு நூற்றாண்டு கழிந்துவிட்ட போதிலும், பக்தி மார்க்கத்திற்கு அது பயன்பட்டது போல வேறொன்றுக்கும் அவ்வளவு பயன்படவில்லை. காசி முதல் இராமேசுவரம் வரை உள்ள க்ஷேத்திரங்களை இணைத்து, "பண்டரிபுரம் எத்தனை தூரமோ, அறியேன்!" என்று தவித்துக் கொண்டிருந்த பக்த கோடிகளுக்கு ரயில்வே தான் பதிலளித்துக் காப்பாற்றியது.

ஆனால் ஒரு வகையில் சில நன்மைகளைச் செய்திருக்கிறது. "கிர்தனர்" காலட்சேபத்தில் கலைவாணர் பாடுவது போல, புத்தரும் ராமானுஜரும் முயன்று தோற்றுப் போன இடத்தில் ரயில்வே வெற்றியடைந்து விட்டது. அதுதான் எல்லோரையும்—மேல் ஜாதியினரையும்- தாழ்ந்த குலத்தவரையும், தீட்சதரையும் தீண்டப்படாத புலையனையும் ஒரே பலகையில் உட்கார வைத்துவிட்டது.

ஒவ்வொரு அரசியல் கொந்தளிப்பிலும் ரயில்வே சம்பந்தப்பட்டு வருகிறது. ஆகஸ்டு போராட்டத்திலிருந்து ஆந்திரப்பிரிவினை வரை அது தன் பங்கைச் செலுத்தியிருக்கிறது.

அமைதியானப் பல போராட்டங்களையும் ரயில்வே பார்த்திருக்கிறது. சில காலத்திற்கு முன் இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் முகத்தான் திராவிடர் இயக்கங்கள் கிளர்ச்சி செய்த பொழுது ரயில்வே போர்டுகள் இந்தி எழுத்துக்களைத் துறந்து பொலிவுடன் விளங்கின.

மத்தியசர்க்கார் ரயில்வேக்களை லாபந்தரும் சாதனங்களாக உபயோகப்படுத்துகின்றனர். அதை விடுத்து மக்களுக்குப் பயன்படும் விதத்தில், வசதி நிறைந்தனவாய், ரயில் பிரயாணம் என்றால் மகிழ்ச்சியடையும் வகையில் ரயில்வேக்களை மாற்ற வேண்டும். ரயில் ஓடுகிறது! வேகம் தேவை; ஓட்டத்தில் மட்டுமல்ல—மாற்றத்திலும் முக்கியமாக!

சென்னையில் திடீரென்று ஒரு நாள் காலை எவ்வித முன்னறிவிப்புமின்றி டிராம் வண்டிகள் நின்று விட்டன. இதனால் பொது மக்களுக்கும் டிராம்வே தொழிலாளருக்கும் ஏற்படக் கூடிய இன்னல்களைக் கருதாமல் கம்பெனி தொழிற்சாலையை மூடி, போக்குவரத்தைத் தடைப்படுத்திவிட்டது.

டிராம் நின்று போனதால், அந்தப் பாதைகளில் அதிகமான பஸ்களை விட்டுப் போக்குவரத்து நிலையைச் சமாளித்து விட்டதாக சர்க்கார் நினைக்கின்றனர். ஆட்டம் கொடுத்தபடி, சத்தம் போட்டுக் கொண்டு ஊர்ந்து கொண்டிருந்த டிராம்கள் நின்றது நல்லதே எனச் சிலர் கூறுகின்றனர். டிராம்வே கம்பெனி மூடப்பட்டதால் எழுந்துள்ள பிரச்சினை, "போக்கு வரத்து நிலையை அரசாங்கத்தால் சமாளிக்க முடிந்ததா? இல்லையா?" என்பதல்ல; "டிராம்களை அறவே நிறுத்தி விடுவதா? வேண்டாமா?" என்பதுமல்ல- முன்னேற்பாடு எதுவுமின்றி கம்பெனி மூடப்பட்டதால் 1600-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையின்றி விரட்டப் பட்டுள்ளனர். அவர்கள் பிழைக்கும் வழி என்ன? அவர்களை நம்பி வாழ்ந்த குடும்பங்களின் கதி என்ன? அவர்களுடைய திக்கற்ற நிலையைத் தீர்க்கும்வரை, நிலைமையைச் சமாளித்ததாகக் கூற முடியாது.

சென்னை அரசாங்கம் டிராம்வே கம்பெனியின் மீது வழக்கு தொடுத்துள்ளது. அதன் முடிவு வருவதற்கும், அந்த முடிவின் மீது காரியமாற்றுவதற்கும் எவ்வளவு காலம் பிடிக்கும் எனச் சொல்ல முடியாது. வேலையில்லாமல் வாடிடும் தொழிலாளர் மனதில் குழப்பமும், திகைப்பும் மூண்டிருக்கின்றன. இந்த வேதனை தரும் நிலையிலேயே அவர்களை விட்டு வைக்காமல், கம்பெனியின் மூலமாவது வேறு வகையிலாவது அவர்களுக்கு உடனடியாக ஏதாவது உதவி செய்ய வேண்டும்.

தொழிலாளர் அனைவர்க்கும் வேலை கிடைக்கும்படி செய்வதோடு, மீண்டும் எதிர்காலத்தில் இவ்வாறு திடீரென்று தொழிற்சாலையை மூடுவது, தொழிலாளரை வேலையினின்று விரட்டுவது போன்ற எதேச்சாதிகாரப் போக்குகள் நிகழாவண்ணம் பாதுகாப்பதும் அரசாங்கத்தின் கடமையாகும்.

ரயில் ... நிறைந்து ஒரு நூற்றுண்டு ஆகிறது. அதற்கான விழா அண்மையில் கொண்டாடப்பட்டது.

நீராவி எழுந்தால், பானையின்மேல் மூடப்பட்டிருக்கும் மூட்டு தள்ளப்படுகிறது ... சிறு உண்மையிலிருந்து எழுந்த விஞ்ஞான ஆராய்ச்சிகளின் பலனும், மணிக்கு நூறு மைல்களுக்கு மேல் செல்லும் நீராவி இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

இந்தியாவில் ரயில் ஓட ஆரம்பித்து ஒரு நூற்றுண்டு கழிந்துவிட்ட போதிலும், பக்தி மார்க்கத்திற்கு அது பயன்பட்டது போல வேறொன்றுக்கும் அவ்வளவு பயன்படவில்லை. காசி முதல் இராமேசுவரம் வரை உள்ள க்ஷேத்திரங்களை இணைத்து, "பண்டரிபுரம் எத்தனை தூரமோ, அறியேன்!" என்று தவித்துக் கொண்டிருந்த பக்த கோடிகளுக்கு ரயில்வே தான் பதிலளித்துக் காப்பாற்றியது.

ஆனால் ஒரு வகையில் சில நன்மைகளைச் செய்திருக்கிறது. "கிந்தனர்" காலட்சேபத்தில் கலைவாணர் பாடுவது போல, புத்தரும் ராமானுஜரும் முயன்று தோற்றுப் போன இடத்தில் ரயில்வே வெற்றியடைந்து விட்டது. அதுதான் எல்லோரையும்—மேல் ஜாதியினரையும்- தாழ்ந்த குலத்தவரையும், தீட்சதரையும் தீண்டப்படாத புலையனையும் ஒரே பலகையில் உட்கார வைத்துவிட்டது.

ஒவ்வொரு அரசியல் கொந்தளிப்பிலும் ரயில்வே சம்பந்தப்பட்டு வருகிறது. ஆகஸ்டு போராட்டத்திலிருந்து ஆந்திரப்பிரிவினை வரை அது தன் பங்கைச் செலுத்தியிருக்கிறது.

அமைதியானப் பல போராட்டங்களையும் ரயில்வே பார்த்திருக்கிறது. சில காலத்திற்கு முன் இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் முகத்தான் திராவிடர் இயக்கங்கள் கிளர்ச்சி செய்த பொழுது ரயில்வே போர்டுகள் இந்தி எழுத்துக்களைத் துறந்து பொலிவுடன் விளங்கின.

மத்தியசர்க்கார் ரயில்வேக்களை லாபந்தரும் சாதனங்களாக உபயோகப்படுத்துகின்றனர். அதை விடுத்து மக்களுக்குப் பயன்படும் விதத்தில், வசதி நிறைந்தனவாய், ரயில் பிரயாணம் என்றால் மகிழ்ச்சியடையும் வகையில் ரயில்வேக்களை மாற்ற வேண்டும். ரயில் ஓடுகிறது! வேகம் தேவை; ஓட்டத்தில் மட்டுமல்ல—மாற்றத்திலும் முக்கியமாக!

சென்னையில் திடீரென்று ஒரு நாள் காலை எவ்வித முன்னறிவிப்புமின்றி டிராம் வண்டிகள் நின்று விட்டன. இதனால் பொது மக்களுக்கும் டிராம்வே தொழிலாளருக்கும் ஏற்படக் கூடிய இன்னல்களைக் கருதாமல் கம்பெனி தொழிற்சாலையை மூடி, போக்குவரத்தைத் தடைப்படுத்திவிட்டது.

டிராம் நின்று போனதால், அந்தப் பாதைகளில் அதிகமான பஸ்களை விட்டுப் போக்குவரத்து நிலையைச் சமாளித்து விட்டதாக சர்க்கார் நினைக்கின்றனர். ஆட்டம் கொடுத்தபடி, சத்தம் போட்டுக் கொண்டு ஊர்ந்து கொண்டிருந்த டிராம்கள் நின்றது நல்லதே எனச் சிலர் கூறுகின்றனர். டிராம்வே கம்பெனி மூடப்பட்டதால் எழுந்துள்ள பிரச்சினை, "போக்கு வரத்து நிலையை அரசாங்கத்தால் சமாளிக்க முடிந்ததா? இல்லையா?" என்பதல்ல; "டிராம்களை அறவே நிறுத்தி விடுவதா? வேண்டாமா?" என்பதுமல்ல- முன்னேற்பாடு எதுவுமின்றி கம்பெனி மூடப்பட்டதால் 1600-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையின்றி விரட்டப் பட்டுள்ளனர். அவர்கள் பிழைக்கும் வழி என்ன? அவர்களை நம்பி வாழ்ந்த குடும்பங்களின் கதி என்ன? அவர்களுடைய திக்கற்ற நிலையைத் தீர்க்கும்வரை, நிலைமையைச் சமாளித்ததாகக் கூற முடியாது.

சென்னை அரசாங்கம் டிராம்வே கம்பெனியின் மீது வழக்கு தொடுத்துள்ளது. அதன் முடிவு வருவதற்கும், அந்த முடிவின் மீது காரியமாற்றுவதற்கும் எவ்வளவு காலம் பிடிக்கும் எனச் சொல்ல முடியாது. வேலையில்லாமல் வாடிடும் தொழிலாளர் மனதில் குழப்பமும், திகைப்பும் மூண்டிருக்கின்றன. இந்த வேதனை தரும் நிலையிலேயே அவர்களை விட்டு வைக்காமல், கம்பெனியின் மூலமாவது வேறு வகையிலாவது அவர்களுக்கு உடனடியாக ஏதாவது உதவி செய்ய வேண்டும்.

தொழிலாளர் அனைவர்க்கும் வேலை கிடைக்கும்படி செய்வதோடு, மீண்டும் எதிர்காலத்தில் இவ்வாறு திடீரென்று தொழிற்சாலையை மூடுவது, தொழிலாளரை வேலையினின்று விரட்டுவது போன்ற எதேச்சாதிகாரப் போக்குகள் நிகழாவண்ணம் பாதுகாப்பதும் அரசாங்கத்தின் கடமையாகும்.

மும்முனைப் போராட்டம்

திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட நாட்டின் அரசியல் — பொருளியல்-சமூகவியல் ஆகிய மூன்று துறைகளிலும் முற்போக்கான மாற்றங் காண பாடுபட்டு வரும் கழகமாகும். பெரும்பாலான மக்களின் எண்ணத்தையும், ஆற்றலையும் பண்படுத்தித் திருப்புவதன் மூலம், அரசியல்-பொருளாதார-சமூகப் புரட்சிகளை, அமைதியான முறையில் நிறைவேற்றி, இன்ப திராவிடத்தின் எழிலுருவத்தைக் காண விரும்புகிறது. அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்கான சூழ்நிலையை உருவாக்கும் பணியினைத்தான் தி. மு. க. இப்பொழுது செய்து வருகிறது.

திராவிடநாடு என்று எதைக் குறிப்பிடுகிறோம் என்றால், தமிழ் மொழி வழங்கும் **தமிழகம்**, தெலுங்கு மொழி பேசும் **ஆந்திரம்** கன்னட மொழி பயிலும் **கருநாடகம்**, மலையாள மொழி வழங்கும் **கேரளம்** ஆகிய நான்கும் சேர்ந்த பரந்த நிலப்பரப்பைத்தான். இந்த நான்கும், மொழி, பண்பாடு, நாகரிகம், இனம் ஆகியவற்றில் ஒன்றிலிருந்து கிளர்ந்தெழுந்த வரலாற்றுத் தொடர்புடையனவாய், அரசியல்-பொருளாதார-சமூகப் பிரச்னைகளில் ஒத்த நிலைமையுடையனவாய், நீர்வளம் - நிலவளம்-கடல்வளம் ஆகியவற்றில் ஒன்றோடொன்று கோர்க்கப்பட்ட இயல்பினவாய், நிலப்பரப்பு-தட்ப வெப்ப நிலை ஆயவற்றில் ஒன்றியதன்மையுடையனவாய் விளங்குகின்றன. எனவே தான் தி. மு. க. திராவிட நாட்டை, அரசியல்-பொருளாதார - சமூகப் பணி புரிவதற்கான உரிமை வாய்ந்த எல்லைப் பரப்பாகக் கருதிச் செயலாற்றி வருகிறது.

சுதந்திர சமதர்ம திராவிடக் குடியரசுக் கூட்டாட்சியை நிறுவுவதை அரசியல் நோக்கமாகவும், **சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி** என்ற பொருளாதார நிலையை ஒருபடித்தாக எல்லோரும் பெறும்படி செய்வதைப் பொருளாதார நோக்கமாகவும், **சாதிவெறி மதவெறி அற்ற, மனிதனை மனிதன் என்று மதித்து நடக்கும் மனிதப் பற்றோடு கூடிய சமுதாயத்தைக்** காண்பதைச் சமூக நோக்கமாகவும் கொண்டு தி. மு. க. பாடுபடுகிறது. மூன்று முனைகளிலும் ஒருசேர நின்று பணியாற்றுகிறது. அரசியல் - பொருளியல் - சமூகவியலிலுள்ள கேடுகளைக் களைய, மூன்றையும் தொடுமாறு மும்முக ஈட்டி கொண்டு போராடுகிறது. மூன்றிலும் கவனம் செலுத்திப் பணியாற்றினால் தான், இந்நாட்டில் நிலையான- நல்ல பலன் ஏற்பட முடியும் என்றும் தி. மு. க. கருதுகிறது.

இதனைப் பல இடங்களில், பல சமயங்களில், பல வழிகளின் மூலம் வற்புறுத்தி வந்திருந்தும், தி. மு. க. சமூகத்தைப்பற்றிக் கவலைப்படுகிறதே யல்லாமல், அரசியல்- பொருளாதாரத்தைப்பற்றி அக்கரை கொள்வதில்லை என்று சொல்லிக் காட்டுவதிலும், தங்களைச் சேர்ந்தவர்களை அந்தப்படிக்கு" நம்ப வைப்பதிலும் ஆறுதல் பெறுகிற அரசியல்வாதிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

பொருளாதார-அரசியல் புரட்சிகள் ஏற்பட்டால் சமூகப் புரட்சி தானே ஏற்பட்டு விடும், சமூகப் புரட்சிக்கான அடிப்படை எண்ணத்தை மக்கள் உள்ளத்தில் ஏற்ற வேண்டியது அவசியமில்லை. அப்படி ஏற்றினால் பொருளாதாரப் புரட்சிக்கு அது தடையாக அமைந்து விடும் என்று 'விசித்திர வியாக்கியானம்' செய்பவர்களும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் கூற்று எந்த அளவுக்குப் பொருத்தமற்றதாகும் என்பதை நடைமுறை உலகைக் கொண்டே நன்கு அறிந்து கொள்ளலாம்.

வளர்ந்தோங்கி வரும் உலக நாடுகளான ரஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா, சீனா போன்ற நாடுகளில், எந்த நாட்டோடு ஒப்பிட்டுப் பார்த்தால், திராவிடம் நெருங்கிய ஒத்த தன்மையுடையதாகக் காணப்படும் என்றால், சீனா என்பது தெளிவாகத் தென்படும். திராவிடம் எப்படி மொழி, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றில் பழம் பெருமை வாய்ந்ததாக இருக்கிறதோ, அப்படித்தான் சீனாவும். திராவிடத்தில் கடவுளர் பற்றும், மதப் பற்றும், சடங்குகள் பற்றும் எந்த வகையில்-எந்த அளவில்-எந்த நிலையில் வேரூன்றிக் காணப்படுகின்றனவோ, அப்படியேதான் சீனாவிலும். இரண்டும் அரிசி உணவிலே வாழ்ந்துவருவனவாகும். இரண்டு நாடும் விவசாய நாடுகள்.

[illegible] தான் முக்கிய பெருந் தொழில். இரண்டிலும் கைத்தொழில் வளர்ச்சி, மேலை நாடுகளை நோக்க, மிகக் குறைந்த அளவினதாகும். அரசியல்-பொருளாதார-சமுதாயத் துறைகளில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் திராவிடத்தில் எப்படிக் காணப்படுகின்றனவோ, அப்படித்தான் சில ஆண்டுகளுக்கு முன் வரையில் சீனாவிலும் காணப்பட்டன. இழிந்து, தாழ்ந்து கிடந்த அப்படிப்பட்ட சீனாவைப் புதிய சீனாவாக மாற்றுவதற்கு, அந்த நாட்டின் மாபெருந் தலைவரான மா-சே-துங் எப்படி யெல்லாம் பாடுபட்டார் என்பதை அறிந்து கொண்டால் அந்த வழிகள் திராவிடத்துக்கும் பெருவகையில் பொருந்துவதாக இருப்பதைக் காணலாம்.

சமுதாயப் புரட்சியைப் பற்றிக் கவலையில்லை, அரசியல் — பொருளாதாரப் புரட்சிகளே முதற்கண் முக்கியம் என்று பேசிடுவோர்க்கு, மா-சே-துங் நல்லமுறையில் பதிலிறுக்கிறார். அரசியல் - பொருளாதாரம் - சமூகம் ஆகிய மூன்றையும் பற்றி ஒருசேரக் கவலைப் படவேண்டியது, எவ்வளவு இன்றியமையாமையாகும் என்பதை, மா-சே-துங் தாம் எழுதிய 'சீனாவின் புதிய ஜனநாயகம்' (China's New Democracy) என்ற நூலில் தெளிவுபட விளக்கிக் காட்டியுள்ளார்.

“சென்ற பல ஆண்டுகளாகச், சீனாவில், கம்யூனிஸ்டுகள், அரசியல்-பொருளாதாரப் புரட்சிக்கு மட்டுமல்லாமல், சமுதாயப் பண்பாட்டுப் புரட்சிக்காகவும் போராடி வந்திருக்கிறார்கள்.

“புதிய அரசியல் முறையும், புதிய பொருளாதாரமுறையும் நிலவச் செய்வது மட்டுமல்லாமல், புதிய சமுதாயப் பண்பாட்டு முறையும் நிலவச் செய்யும் படியானவகையில் ஒரு புதிய சமூக அமைப்பையும், ஒரு புதிய நாட்டையும் சீனமக்களுக்கு உருவாக்கிக் கொடுப்பதே போராட்டத்தின் முழு நோக்கமாகும்” [For the many past years, Communists have struggled not only for the political and economic revolution in China, but also for the cultural revolution-all aiming at the Construction of a new society and a new Country for the Chinese people, in which not only a new system of politics and economy but also a new culture will prevail.]

என்று மா-சே-துங் அழுத்தந்திருத்தமாக வற்புறுத்தியுள்ளார். அரசியல்- பொருளாதாரத் துறைகளில் எந்த அளவுக்குப் பாடுபடவேண்டியிருக்கிறதோ, அந்த அளவுக்குச் சமூகத்திலும் பாடுபட வேண்டும் என்ற உண்மையை புதிய சீனாவை வெற்றிகரமான வழியில் உருவாக்கிக் கொண்டிருக்கும் மா-சே-துங்கின் சொல்லால் இனிது அறியலாம். திராவிடத்தைப் பொறுத்த வரையிலும், அந்தத் தன்மையை நன்கு அறிந்துகொண்ட திராவிட முன்னேற்றக் கழகமும், மும்முரமாக ஈட்டி கொண்டு போராடத் தலைப்பட்டிருக்கிறது.

மேலும் அவர் தொடர்ந்து செல்லும் போது,

“இதன் பொருளாவது, நாம், அரசியலிலே அடிமைப்பட்டிருக்கும் சீனாவை அரசியல் விடுதலை பெற்ற நாடாகவும், பொருளாதாரத் துறையிலே சுரண்டப்படும் சீனாவைப், பொருளாதாரத்திலே வளமான நாடாகவும் மாற்றியமைக்க வேண்டியவர்களாக இருப்பதோடு, அறியாமையிலும் பிற்போக்கிலும் தள்ளப்பட்டுப், பழைமையான பண்பாட்டால் ஆளப்படும் மக்கள் நிறைந்த சீனநாட்டை நாகரிகம் வாய்ந்த ஒன்றாகவும், முற்போக்கு வாய்ந்த ஒன்றாகவும் ஆக்கிப், புதிய சமுதாயப் பண்பாட்டால் ஆளப்படும் தன்மையதாகவும் மாற்றியமைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.” [This means that we have not only to change politically oppressed and economically exploited China into a country politically free and economically prosperous, but also to change a country whose people are so ignorant, backward and long ruled by an old culture, into a civilised, progressive one ruled by a new culture.]

என்று நல்லதொரு விளக்கந்தருகிறார். பழைமையானதொரு பண்பாட்டால் ஆளப்பட்டு, அறியாமையிலும், பிற்போக்கிலும் கிடந்து உழலும் சீனாவை, புதிய பண்பாடமைந்த நாடாக ஆக்குவதிலே, மா-சே-துங் எவ்வளவு அக்கறை காட்டினாரோ-எவ்வளவு அக்கறை காட்ட வேண்டி வந்ததோ, அவ்வளவு அக்கறை, வேண்

டப்படாத பழைமை நாகரிகமான ஆரிய நாகரிகத்தால் ஆளப்பட்டு, அறியாமையிலும், பிற்போக்கிலும் கிடந்துழலும் திராவிடத்தை மாற்றிப் புதிய பண்பாட்டோடு கூடிய புதிய திராவிடத்தை உருவாக்குவதில், திராவிட முன்னேற்றக் கழகத்தாரும் காட்டவேண்டி வருகிறது.

புரட்சிகரமான பண்பாட்டுக் கருத்துக்கள் தூவப்பட்ட வழியிலேதான், அரசியல்-பொருளாதாரப் புரட்சி நடந்து செல்ல முடியும் என்பதையும் மா-சே-துங் விளக்குகிறார்.

“புரட்சிகரமான சமுதாயப் பண்பாடு மக்களின் வலிவுள்ள புரட்சிகரமான ஆயுதமாகும். புரட்சி வெடித்துக் கிளம்புவதற்கு முன்பு, சமுதாயப் பண்பாடு, புரட்சிகரமான கருத்துக்களைப் பரப்புவதன் மூலம், புரட்சிக்கான பாதையைச் செப்பனிட்டுக் கொடுக்கிறது” [Revolutionary Culture is a powerful revolutionary weapon of the people. Before the outbreak of the ...ultu paves the w... it by spreadin revolutionary thoughts.]

என்பது மா-சே-துங்கின் நல்ல பொன்னுரையாகும்; அந்த வழியைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் நல்ல முறையிலே தேர்ந்து பின்பற்றி வருகிறது.

சமுதாயக் கருத்துக்களிடத்துக் கவனஞ் செலுத்த வேண்டிய அவசியமில்லை என்று கூறிடும் அரசியல் வாதிகளுக்கு, மா-சே-துங்கின் ‘சீனாவின் புதிய ஜனநாயகம்’ என்ற நூல் ஏற்ற விடை தருவதாக இருக்கிறது.

மூன்று துறையிலும் ஒருசேர நின்று பாடுபட்ட மா-சே-துங் பழம்பெருஞ் சீனாவைப் புதிய சீனாவாக்கினார். அஃதே போன்று தி.மு.கழகத்தாரும், மூன்றுமுனையிலும் நின்று பழம்பெரும் திராவிடத்தைப் புதிய திராவிடமாக மாற்றுவோமாக! தி.மு.க. மும்முனையிலும் வெற்றியபப்பதாக!

— இரா. நெ.

நேர்மைவழி நிற்றல்

பெருந்தலைச் சாத்தனார் என்பவர் சங்ககாலப் புலவர்களிலே ஒருவர். அவரது இயல்பானப் பெயர் சாத்தன் என்பது. அவரை உயர்வுபடுத்த, சாத்தனார் என்று அழைத்தனர். பெருந்தலை என்பது அவருக்கு இட்ட அடைமொழி. அவரது தலை பெரிதாக இருந்த காரணத்தாலோ அல்லது அவரது ஊர் அப்பெயரிலேயே அமைந்திருந்த காரணத்தாலோ அவருக்கு அவ்வடைமொழி இடப்பட்டிருக்க வேண்டும்.

இளங்கண்டிரக்கோ, இளவிச்சிக்கோ என்ற இரண்டு அரசர்கள் ஓரிடத்தில் அமர்ந்து மகிழ்ந்திருந்தனர். அப்பொழுது பெருந்தலைச் சாத்தனார் அங்கு வந்தார். அவர் இளங்கண்டிரக்கோவைத் தம் உடலோடு அணைத்து, ஆரத் தழுவி, தன் அன்பினைக் காட்டிக் கொண்டார். இளவிச்சிக்கோவை யார் என்று அறிந்திருந்தும், அப்புலவர் அவனை மதித்துத் தழுவவில்லை.

ஏன் இளவிச்சிக்கோவைத் தழுவவில்லை என்று கேட்டபோது, அதற்கு அப்புலவர் **“இளவிச்சிக்கோ நீதியற்ற முறையில் பெண்ணைக் கொலை செய்த நன்னன் என்ற அரசன் பரம்பரையிலே வந்தவன். அதோடு மட்டுமல்லாமல் அவன் செந்தமிழ்ப் புலவர்களை வரவேற்றுப் போற்றிப் பாராட்டும் பண்புடையவனல்லன். ஆகையினாலேதான் என் போன்ற புலவர்கள் அவனுக்கு உரிய தான விச்சி மலையின் சிறப்பைப் பாராட்டிப் பாடுவதை நிறுத்திக் கொண்டோம். அவனை நான் என்றும் மதிப்பதில்லை”** என்று பதிலிறுத்தாராம்.

வறுமையால் வாடிய பொழுதும் வயிற்றுக்காகத் தம் நேர்மையை விற்காமல், கூற வேண்டியதைக் கூறித் தீர வேண்டும் என்பதற்குப், பெருந்தலைச் சாத்தனார் சிறந்த எடுத்துக் காட்டாவார்.

[புறம் 151]

எழிலோவியம்

[கவிஞர் வாணிதாசன்]

சிட்டுகள் இசைக்கும்; வான
இருளினில் தெளிவு பாயும்;
மொட்டுகள் நுகர வண்டு
முன்பின்னுய்ப் போட்டி போடும்;
கட்டிணைக் குலைக்கும் கீழ்வான்;
வைகறைக் குளிர்ந்த காற்று
பட்டுடல் மகிழும்; காலை,
ஓவியம் பார்! பார்! தம்பி!

ஆயிரம் வண்ணம் காட்டும்
அடிவானப் பெருமு கில்கள்;
பாய்கதிர் ஒளிம றைக்கும்;
பசுமலை குன்றைச் சுற்றிப்
போய்விடும் ஓடை போலத்
தோன்றிடும் புதுவெள் ளத்தில்
மாய்கதிர் செக்கர் வானம்
எழிலோ வியம் பார் தம்பி!

தொடுவான மதிலுக் கப்பால்
தோன்றிடும் அழகைக் காண,
நடுவினில் துளைத்த சந்தோ!
அகண்டமோ! நடுவி ளக்கோ!
கடலிடை எழுந்த காலைக்
கதிரவன்! கதிரின் வீச்சுப்
படுமிட மெல்லாம் பொன்! பொன்!
பார்எழில் ஓவி யத்தை!

களிமயில் அகவும்; புள்ளிக்
கருங்குயில் பாட்டி சைக்கும்;
விளித்திடும் துணைபி ரிந்த
புள்ளினம்; விளாம ரத்தில்
ஒளித்துண்ணும் அணிலோ கிள்ளை
ஒளிமுக்கக் மிளகா யென்று
களித்துண்ணப் பாயும் காட்டில்;
காண்எழில் ஓவி யத்தை!

பசுவரை நெடுஞ்சு வர்மேல்
படிந்திட்ட கொண்டல் வான
விசும்பினில் எழுந்த தீயின்,
மென்புகை! எருமை! பாறை!
திசையெலாம் அழகின் வீச்சு!
செடியெலாம் புள்ளின் பாட்டாம்!
இசையினுக் கேற்பக் கல்லின்
இடுக்கில்பாய் அருவி ஆர்க்கும்!

அந்தியில் ஒவ்வொன் றாக
வானத்தை அடைந்த மீன்கள்
சிந்தையை அள்ளும்! மானம்
செல்லுண்ட குடைபோல் தோன்றும்
வந்தது நிலவு! இன்பம்
வந்ததே! உடல்உ யிர்மேல்
சிந்திய ஒளித்திட் டாத
எழிலோ வியம்மே தம்பி!

எப்படி மாறிவிட்டான்!

[இரா. செழியன்]

சதாசிவ முதலியாருக்கு இப்பேர்ப்பட்ட பிள்ளை எங்கிருந்து வந்தான் என்று ஊரிலே எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். சதாசிவ முதலியார் பெரிய மனிதர்—திடீர்ப் பெரிய மனிதர் அல்ல, பரம்பரையான கௌரவமான குடும்பத்தில் வந்தவர், சிவன் கோவில் தர்மகர்த்தா. நேம நியம தானதருமங்களில் தவறாதவர்- சைவச் சீலர். ஆனால் அவருடைய மகன் சுந்தரமூர்த்தி அவருக்கு நேர் மாறாக இருந்தான். ஊரில் எவனெவனுக்கு நன்னடத்தை ஜாமீன் வாங்க வேண்டுமோ அவனெல்லாம் நம் சுந்தரமூர்த்திக்கு ஆப்த நண்பர்கள். அவனைப் பற்றிய புகார்கள் முதலியார் காதில் விழாத நாளில்லை.

" பையன், என்ன, இராத்திரி வேளைகளில் தெரு அகலத்தை அளந்து பார்த்துக்கொண்டு போனான்!"

"பக்கத்தில் போனால் பரிமள காந்தம் சகிக்க முடியாது!"

"எங்கிருந்து வருகிறான் தெரியுமில்லே! சன்னதித் தெருவிலிருந்து!"

" அப்போ சரிதான்! இந்திரன் சந்திரன் கெட்டுப் போனபோது இவன் கெட்டுப் போக யாரைக் கேட்கணும்?"

"ஆனால் முதலியாரை நினைத்தால்தான் பாவமாயிருக்கிறது. பரம சாது அவர், அவருக்கு இந்தப் பழி வந்து பிள்ளையாண்டானாக வாய்த்திருக்கிறதே!"

சதாசிவ முதலியார்தான் என்ன செயவார்! கல்யாணமாகி இருபது வருஷம் பிள்ளையில்லாமலிருந்தது. அவரும் அவருடைய தர்மபத்தினியும் ஆடாத தீர்த்தம், அலையாத க்ஷேத்திரம், இருக்காத நோன்பு, செய்யாத தர்மங்கள் கிடையா. முதலியாரின் முயற்சியால் துணையின்றி வாடிய எவ்வளவோ ஆலங்கன்றுகளுக்கும் வேப்பங்கிளைகளுக்கும் திருமணம் நடைபெற்றிருக்கின்றன. இவ்வளவு சுபகாரியங்களுக்குப் பின்தான் பிள்ளைப்பேறு கிடைத்தது. பிள்ளையின்றி அவர் ஏங்கிக் கிடந்தது போக, இப்படி ஒரு பிள்ளை வந்து முளைத்தானே என்று மனம் நொந்துபோனார். தவங்கிடந்து பெற்றெடுத்த பாலகன் தறுதலையாகத் திரிகிறான் என்றால் யாருக்குத்தான் வருத்தம் இருக்காது. அவனைத் திருத்தி, நல்வழிக்கு எப்படிக் கொண்டு வருவது என்று அவருக்குப் புரியவில்லை. அதற்கொரு வழி வேண்டித் தன் ஆத்ம நண்பர் தணிகாசலம் பிள்ளையைக் கலந்து ஆலோசித்தார்.

இந்தப் பாப காலத்திலும் சைவத்தை ஒருவர் கட்டிக்காத்து வருகிறார் என்றால், அவர் தணிகாசலம் பிள்ளையாகத்தான் இருக்க முடியும். அஞ்செழுத்து நெஞ்சிலே தங்க, அழகான திருநீறு மேனியில் விளங்க, தேவார திருப்பண் நாவிலே இசைக்க, உருத்திராக்க மாலை மார்பிலே அசைய அரனுக்கன்பராக அவர் விளங்கினார். தூய்மையும், ஒழுக்கமும் அவரிடம் நிறைபெற்றிருந்தன.

" பிள்ளைவாள்! எத்தனை பிறவி பாபஞ் செய்து இப்பிள்ளையைப் பெற்றேனோ தெரியவில்லை. சுந்தரமூர்த்தியைப் பற்றி நினைத்தாலே...." என்று சதாசிவ முதலியார் தன் குறையை ஆரம்பித்தார்.

" சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பற்றி நினைக்கும் பொழுது ஆகா! உள்ளமே நெக்குருகுகிறது. திருத்தொண்டர் புராணத்தில அவரைப்பற்றி என்ன சொல்கிறது தெரியுமா? 'எம்பிரான் அந்தமில் புகழ் ஆலால சுந்தரன்' 'மேரு வரையின் மேம்பட்ட தவத்தான்' 'விண்கொள்ளாப் பேரொளியன்' 'ஞாலமுய்ய எழுந்தருளும் நம்பி', என்றெல்லாம் போற்றப்பட்டிருக்கிறார் என்று கண்ணீர் மல்கித் தணிகாசலம் உட்கார்ந்திருந்தார்.

" இருக்கலாம். அந்த சுந்தரமூர்த்தி உலகத்தைக் காப்பாற்ற வந்திருப்பார். ஆனால் நம் சுந்தரமூர்த்தி உலகத்தையே கெடுக்க வந்திருக்கிறான் ஐயா." என்றார் முதலியார்.

" சுந்தரரின் திருநாமத்தை நான்தான் அவனுக்குச் சூட்டினேன். அந்தப் பெயருக்கு எப்பொழுதுமே குறைவராது"

...வத்தபடியேதான் இருக்கிறது. ஆனால் பையன்தான் கெட்டுக் கீரை ழியாகி நிற்கின்றான்."

"உலகத்தின் பாசத்திலே வசப்பட்டு அவன் உழலுகிறான், அதிலிருந்து விடுபட்டால்தான் பதியை அடைய முடியும்."

"தணிகாசலம்! நீர் வேதாந்தம் பேசுகிறீர், நான் படும் வேதனை தெரியாமல்"

"இது சித்தாந்தம், வேதாந்தத்துக்கும் த்தாந்தத்துக்கும் அடிப்படையிலேயே வேற் மை இருக்கிறது"

சதாசிவ முதலியாருக்குக் கோபமே வந்துவிட்டது. "என்ன வேண்டுமானாலும் இருக்கட்டும். நம் பிள்ளையாண்டானை எப்படித் திருத்துவது என்பதை நான் கேட்கிறேன்."

"சமயக் குரவர்களில் ஒருவரான அப்பர் கூட வெகுகாலம் மாயாவாதங்களில் ஈடுபட்டிருந்தார். பின்தான் திருநீற்றின் பெருமையால், சைவத்தின் மேன்மையால் அவர் நல்வழிக்குத் திரும்பினார்- நம் சுந்தரனுக்கும் சைவத்திடம் பற்று உண்டாகச் செய்யவேண்டும். சமய வாழ்வுதான் அவனை ஒழுக்கச் சீலனாக்கும்." என்று தணிகாசலம் அருளினார்.

"இந்த நல்ல காரியத்தை நீங்கள்தான் செய்யவேண்டும். உங்களிடந்தான் அவனுக்குக் கொஞ்சமாவது பயமிருக்கிறது." என முதலியார் வேண்டிக்கொண்டார். தணிகாசலமும் ஒப்புக்கொண்டார்.

மறுநாளிலிருந்து சுந்தரமூர்த்திக்கு உபதேசங்கள் ஆரம்பமாயின. தேவார திருவாசகப் பாடல்களைத் தணிகாசலம் பாடிக் காண்பித்தார். சைவத்தின் மேன்மை, திருநீற்றின் பெருமை, சமயத்தின் தொன்மை, சித்தாந்தத்தின் உண்மை எல்லாவற்றையும் போதித்தார். சுந்தரமூர்த்தியிடம் இவர் ஜம்பம் ஒன்றும் சாயவில்லை. இவரிடம் பாடங் கேட்கும் நேரம் போக மற்ற வேலைகளில் முன்னைவிட ஊக்கமாகத் தன் வேலைகளில் அவன் ஈடுபட்டிருந்தான்.

தணிகாசலத்துக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. ஒரு தத்துவத்தைச் சொன்னால் போதும், ஒரு பாடலைப் பாடினால் போதும், ஒரு தொண்டர் கதையைக் கேட்டால் போதும் அப்புறம் சுந்தரமூர்த்தி அப்படியே பக்தனாகி விடுவான் என்று தணிகாசலம் எதிர்பார்த்தார். பாடும்பொழுதும் படிக்கும்பொழுதும் இவருக்குத்தான் மெய் சிலிர்த்து, கண்ணீர் மல்கி, என்பு உருகி, உள்ளம் குழைந்து வந்ததே தவிர, எதிரே இருந்த சுந்தரமூர்த்தி ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தான். தணிகாசலம் திகைத்து விட்டார். திருவாசகத்திலேயே இவன் உருகவில்லையென்றால், வேறு எவ்வாசகத்தைக் கொண்டு இவனை உருகச்செய்வது! என்று அவருக்குப் புரியவில்லை. அவனைத் திருத்துவது என்பது முடியாத காரியம் என்று அவருக்குப்பட்டது. எப்படியாவது அவன் போகட்டும் என்று விட்டுவிடலாம் என்றாலும் அதற்கும் அவர் மனம் இடங்கொடுக்கவில்லை. பாபங்களில் முழ்கிக் கிடக்கும் இவன் இன்னும் எத்தனைப்பிறவிகளில் உழலவேண்டியிருக்கும், நரகத்தில் எவ்வளவு இடர்ப்பட வேண்டியிருக்கும் 'என்று நினைக்கும் பொழுது தணிகாசலம் தம் சோர்வை விட்டு,

"எப்படியாவது இவனைக் காப்பாற்ற வேண்டும். உலகிலுள்ள சமயங்களிலெல்லாம் உயர்ந்தது என்று எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட சைவ சமயத்தில், எப்பாடுபட்டேனும் இவனை ஈடுபடுத்த வேண்டும்" என்று உறுதிகொண்டார்.

கடைசியாகத் தணிகாசலத்துக்கு ஒரு யோசனை தோன்றியது. சொல்லிக்கொடுப்பதைவிட, சமயத்தின், சிறப்புகளை நேரில் காட்டினால்தான் சுந்தரமூர்த்தி திருந்துவான் என்றுபட்டது. திருத்தலங்களுக்கு அழைத்துச் சென்று, ஈசன் எழுந்தருளியிருக்கும் கோயில்களைக்காட்டி, ஒவ்வொரு தலத்துக்குமுள்ள மகிமையையும் பாடல்களையும் சொல்லித் தொன்றுதொட்டு நடைபெற்று வரும் பக்தி முறை வழிபாடு உற்சவாதிகளை நேரில் காண்பித்தால், சுந்தரமூர்த்திக்குச் சமயப்பற்று உண்டாகும் என்று நினைத்தார். முதலில் ஒன்றும் தெரியாவிட்டாலும் எம்பெருமானின் திருவுருவத்தை நேரில் பார்த்தவுடன் சிலருக்குப் பக்தி உண்டாகும். காட்டிலே வேட்டையாடித் திரிந்துகொண்டிருந்த திண்ணன், காளத்தி மலையில் சிவபெருமானின் உருவத்தைக் கண்டவுடன் பக்தி உண்டாகிக், கண்ணப்பநாயனாராக ஆனகதை தணிகாசலத்துக்கு ஞாபகம் வந்தது.

ஒருநல்ல நாளில், சுபவேளையில் தணிகாசலம் சுந்தரமூர்த்தியை அழைத்துக்கொண்டு

கிளம்பினார், திவ்யக்ஷேத்திரங்களைத் தரிசித்து வர. "எப்படியாவது மகன் திருந்தவேண்டும்" என்று சதாசிவ முதலியார் வேண்டிக் கொண்டார். "மூர்த்தியாவது திருந்துவதாவது" என்று ஊரார் பேசிக்கொண்டனர்.

தணிகாசலமும் சுந்தரமூர்த்தியும் முதலில் தில்லைத் திருத்தலத்திற்குச் சென்றார்கள். இரவு வந்த பிரயாண அலுப்பினால் சுந்தரமூர்த்தி காலை பத்து மணி வரை நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான். "உடல் மட்டுமென்ன, அவன் ஆன்மாவே உண்மையொளி படாமல் உறங்கிக்கொண்டிருக்கிறது" என்று நொந்த வண்ணம் தணிகாசலம் தாம் மட்டும் கோயிலுக்குச் சென்று, பொன்னம்பலத்தின் பக்கமே நின்று, 'பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழலைப்' போற்றினார். சுந்தரமூர்த்தி ஊரைச் சுற்றிப் பார்த்து வந்தான். சமயக் குரவர்கள் நடமாடிய, சைவம் தழைத்த வீதிகளில் அவன் உலவி வந்ததே எவ்வளவோ நல்லது என்று தணிகாசலத்துக்குப் பட்டது.

சில நாட்களுக்குள் தணிகாசலத்தின் வற்புறுத்தலின் பேரில், சுந்தரமூர்த்தியும் கோயிலுக்கு வந்தான். அன்று ஆருத்ரா தரிசனம். கூட்டம் தாங்கமுடியாமல் இருந்தது. தணிகாசலத்தின் முன்னேற்பாட்டால் வசதியான இடத்தில் இருந்து அவர்களால் கடவுளைப் பார்க்க முடிந்தது. ஆனந்த நடம் புரியும் ஆண்டவனையும், அலங்கார தீபங்கள், அபிஷேக ஆராதனைகள், இவற்றைக் கண்டு களிக்கப்பரவசத்துடன் கூடியிருக்கும் பக்தர்கள் கூட்டத்தையும் சுந்தரமூர்த்தி பார்த்தான். இதற்கு முன் இப்படிப்பட்ட பெரிய கோயில்களுக்குச் சென்றதில்லை, பக்தர்களின் கூட்டத்தையும் அவன் பார்த்ததில்லை.

சிறுகச் சிறுக, சுந்தரமூர்த்தி தானாகவே கோயிலுக்குப் போவது, மூன்று முறை என்றால் நான்கு ஐந்து முறை கூட வலம் வருவது, பக்தியுடன் விபூதி பூசிக் கொள்வது, பூஜை நேரங்களில் தயாராக இருப்பது என்று மாறிக் கொண்டு வந்தான். தணிகாசலத்துக்கு சந்தோஷம் தாங்கவில்லை. ஊரிலே சகாதேவ முதலியார் "திருந்திய பிள்ளை மறுபடியும் பாப மார்க்கத்துக்குப் போகக்கூடாது" என்று பரமனை மன்றாடிக் கேட்டுக் கொண்டிருந்தார்.

தில்லையில் சிலகாலம் தங்கியிருந்து விட்டு, பின் திருவண்ணாமலை, திருவானைக்கா, திருவாரூர், திருச்சிற்றம்பல ... இப்படி பாடல் பெ... தலங்களுக்குப் போனார்கள். வர வர சுந்தரமூர்த்தியின் ஆர்வம் அதிகமாகிக் கொண்டே சென்றது. சமய வாழ்வில் முழுவதும் ஈடுபட்டு விட்டான்.

கடைசியில் சுந்தரமூர்த்தி ஊர் திரும்பினான். அவனைப் பார்த்தவர்கள் அடையாளம் தெரியாமல் ஆச்சரியப் பட்டனர். பவுடர் பூசி, சில்க் சட்டையணிந்து, கழுத்தில் கைக்குட்டையைச் சுற்றிக் கொண்டு, திரிந்த சுந்தரமூர்த்தி, திருநீறு பூத்த மேனியாய், பட்டாடை அணிந்து, உருத்திராட்ச மாலை தவ... வந்து நின்றான். தந்தை மெய்மறந்தார். அன்... பர்கள் ஆர்த்தனர். கோயிலிலே அர்ச்சனை ஆராதனைகள் நடைபெற்றன. ஊர்ப் பெரிய மனிதர்கள் எல்லோரும் வந்திருந்தனர். "எப்படியோ திருந்தி விட்டானே" என்று பலரும் சதாசிவ முதலியாரை வாழ்த்தினார்கள்.

தணிகாசலம் பிள்ளை மட்டும் சோர்வுடன் இருந்தார். அதிக உற்சாகம் காட்டாமல் கூடிய வரையில் ஒதுங்கி நின்று தன்பாட்டுக்குப் போய்விட்டார். ஆனால் சுந்தரமூர்த்தி அவரால்தான் திருந்தினான் என்பது எல்லோருக்கும் தெரியும். "ஊர்ப்பிள்ளைகளில் இன்னும் பலர், சுந்தரமூர்த்தியைப் போலக் கெட்டுப்போகா விட்டாலும், குதர்க்க வாதங்களில் ஈடுபட்டு வாழ்நாளை வீணாக்கும் சிறுவர்கள் இருக்கிறார்கள் அவர்களையும் சுந்தரமூர்த்தியைப் போல திருத்த வேண்டும்" என்று தணிகாசலத்தைக் கேட்டுக் கொண்டார்கள். ஊர்ப் பெரிய மனிதர்கள் நல்வழிச் சபை என்று ஒன்று ஆரம்பிப்பது, அதற்கு ஏராளமாகப் பணம் திரட்டுவது அதற்கு தணிகாசலம் தலைமை வகித்து நடத்துவது என்றெல்லாம் பல மெய்யன்பர்கள் திட்டமிட்டனர். ஆனால் எதற்கும் தணிகாசலம் ஒத்துக் கொள்ளவில்லை.

தணிகாசலத்துக்கு ஊரிலே மதிப்பு அதிகரித்தது. பொல்லாத ஒருவனை நல்வழிக்குக் கொண்டுவந்த நல்லவர் என்ற பெயர் அவருக்குக் கிடைத்தது. ஒரு நாள் நெருங்கிய நண்பர் ஒருவர் அவரைச் சந்தித்தார்!

தனக்கு தெரிந்த ஒருவன் அடங்காத பையனாக இருப்பதாகவும் அவனைத் திருத்திக் கொண்டு வரும்படி அந்த நண்பர் தணிகாசலத்

தைக் கேட்[illegible]ண்டார். எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்ய அவர் தயாராயிருந்தார். தணிகாசலம் எவ்வளவோ சாக்கு போக்குகள் சொல்லியும் அவர் விடுவதாயில்லை.

“சுந்தரமூர்த்தியை நீங்கள் தானே திருத்தி நல்லவராகக் கொண்டு வந்தீர்கள். இப்பொழுது ஏன் முடியாது என்கிறீர்கள்?” என்று நண்பர் கேட்டார்.

தணிகாசலம் முகம் சற்றுக் கறுத்தது. “சுந்தரமூர்த்தியை நான் திருத்தினேனா? இல்லை, அவன்தான் என்னைத் திருத்தினான்” என்றார்.

“என்ன?”

“சுந்தரமூர்த்தி எப்படித் திருந்தினான் என்று பலருக்குத் தெரியாது. முதலில் நான் உபதேசிக்கும் பொழுதெல்லாம் தனக்கும் பக்திமார்க்கத்திற்கும் வெகு தூரம் என்று அவன் ஒதுங்கிக் கொண்டிருந்தான். பின் பெரிய தலங்கள், மடங்கள், ஆஸ்ரமங்கள் இவைகளைப் பார்த்ததும் அவன் பயம் தெளிந்தான். எனக்குத் திகைப்பு உண்டாயிற்று. காவி வேட்டியில் கள்ள நினைவுகள், சாம்பிராணிப் புகையருகே சாராய நாற்றம், மடாலயங்களில் மதன போகங்கள், ஆஸ்ரம குகைகளில் பணந் தேடும் திட்டங்கள்-எல்லாவற்றையும் கண்டோம். அவனால் சீக்கிரத்தில் மோப்பம் பிடிக்க முடிந்தது, எனக்குத் தெரியநாளாயிற்று, அவ்வளவுதான். ‘இவ்வளவு வழிகளிருக்கின்றனவா?’ என அவன் மகிழ்ந்தான். நான் ‘பக்தி வேஷத்தில் இவ்வளவு பாபகாரியங்களா?’ என்று பதை பதைத்தேன். பக்தர்கள் என்று சொல்லிக் கொள்ளும் பலரின் உண்மை நிலை அப்போழுதுதான் எனக்குத் தெரிந்தது. கடவுளை அவர்கள் மறந்து விட்டார்கள்-இல்லை மறுத்து விட்டார்கள். கோயில்களில் கடவுளை அவர்கள் சுற்றி வரவில்லை, பொன்னையும் மண்ணையும் போகபோகாதிகளையும் சுற்றி வட்டமிட்டு வருகின்றனர். பாபத்தை மாற்றி விடுவதற்குத் தங்களிடம் மருந்து இருக்கிறது என்று நினைத்துக் கொள்ளுகிறார்கள். பாபத்லதை பக்தி வேஷத்தால் மறைக்கப் பார்க்கிறார்கள். சுந்தரமூர்த்தி அந்த வேஷத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். அதே காரணத்தினால், நான் எட்டி வந்துவிட்டேன்.

இப்பொழுதெல்லாம் சுந்தரமூர்த்தி பெரிய பக்திமான். விரதம், நோன்பு எதையும் தவறுவதில்லை. ஆருத்ரா தரிசனம், அண்ணாமலை தீபம், கிருத்திகை விசேஷம், சித்திரை விழா எதையும் அவர் விடுவதில்லை.

தணிகாசலம் தனது சிறப்பானதோற்றதை இழந்துவிட்டார். முன்பிருந்த விபூதிப் பட்டைகள் கிடையாது, உருத்திராட்ச மாலை கிடையாது, உபதேச, உபவாசங்கள் கிடையாது, தன் வேலையுண்டு தானுண்டு என்று போய்க்கொண்டிருப்பார்.

ஊரார் சுந்தரமூர்த்தியைப் பார்க்கும் பொழுது “எப்படி மாறிவிட்டார்!” என்று ஆச்சரியப்படுவார்கள். அவர்களே தணிகாசலத்தைப் பார்க்கும் பொழுது “எப்படி மாறிவிட்டார்!” என்று வருத்தப்படுவார்கள்.

வெள்ளைக்காரர்களின் பழக்க வழக்கங்கள் பணத்தோடும், கிராப்போடும், அரைமீசை மயிரோடும் போகும்; பார்ப்பனர் புகுத்தின பழக்க வழக்கங்களோ புத்தியை மாத்திரமல்லாமல், அதற்கப்பாலும் பாழ் பண்ணிவிடும்.

—கைவல்யனார்

கங்கையில் ஸ்நானம் செய்தால் பாவமெல்லாம் போய்விடுமென்று நினைக்கப்படுகிறது. இது உண்மையானால், அதில் கிடக்கும் மீன், ஆமை, முதலை முதலிய ஜெந்துக்களுக்கும், 1800 மைல் நீளம் தினம் அதிலேயே குளிக்கும் ஜனங்களுக்கும் எவ்வளவு புண்ணியம் வர வேண்டும!

— கைவல்யனார்.

மேடைப் பேச்சு: பயி[redacted]

[11—4—53 சனியன்று மாலை சென்னை வானொலியில் இரா. நெடுஞ்செழியன் பேசிய பேச்சு.]

வாளேந்திக் களம்நோக்கிச் செல்லும் காளையொருவன், களத்திலே வெற்றிவாகை சூடவேண்டும் என்ற எண்ணத்தால், எவ்வளவு உறுதி-ஊக்கம்-உணர்ச்சி-எழுச்சியோடு காணப்படுவானோ, அவ்வளவு நலன்கள் நாவேந்தி மேடை ஏற விரும்பும் நாவலனுக்கும் தேவைப்படுகின்றன. களத்திலே வீரன்-மேடையிலே பேச்சாளன்! இருவர்க்கும் மன எழுச்சி ஒரு தன்மையது! வீரன், தன் வாளினை எவ்வளவு அறிவோடும், ஆற்றலோடும், தெளிவோடும், திட்பத்தோடும் சுழற்றவேண்டியிருக்கிறதோ, அவ்வளவு அறிவு ஆற்றல் தெளிவு திட்பத்தோடுதான், மேடைப் பேச்சாளனும் தன் நாவினை அசைக்க வேண்டியிருக்கிறது.

பொதுமேடை ஏறிச் சொற்பொழிவு ஆற்றுதல் என்பது, கற்றறியவேண்டிய கலைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. அறிவின் தெளிவு இதயஉணர்வு தொழில் நயம் ஆகியவற்றில் ஏற்படும் நுட்பம் கலைக்கு அழகுதருகின்றது. அத்தகைய நுட்பம் பழக்கத்தாலே மட்டும் வளரும் பண்பாடாக இருந்து வருகிறது. எனவே மேடைப்பேச்சுக்கலை வளர-வாழ-செழிக்க-அழகுபெற பயிற்சியும் பழக்கமும் இன்றியமையாது வேண்டப்படுவனவாகும்.

மேடைப்பேச்சு, பயிற்சியாலும் பழக்கத்தாலும் மெருகு ஏறி விளங்கும் தன்மையது என்பதை, உலகப் பேச்சாளர்களின் வரலாறுகளிலிருந்து இனிது அறிந்து கொள்ளலாம். மேடைமீது ஏறி, நாக்கு அடிப்பாக வாய்ப்பறை அறைந்து, நானில மக்களைத் தம்பால் இழுத்து நிறுத்திய நாவலர்கள் எல்லோரும், தங்கள் தங்கள் பேச்சுத்திறனைச் சீரும் சிறப்பும் எய்த, அழகும் ஆற்றலும் மிளிர, நாளுக்குநாள் வளர்த்தே வந்துள்ளார்கள்

தமிழகத்தில், மரத்தடியில் நின்று பேசுதலும், பட்டிமன்றங்களில் பாங்குற மொழிதலும், அரச அவைக்களங்களில் அறிவுரை வழங்குதலும், போர்க்களங்களில் படைவீரர்களை நோக்கி முழங்குதலும் மேடைப்பேச்சின் வகையைச் சேர்ந்தனவாகக் காணப்பட்டன என்றாலும், ஒழுங்கு படுத்தப்பட்ட அமைப்போடும், பயிற்சிபெற்ற பான்மையோடும் மேடையை முதன்முதலில் நன்முறையில் வளர்த்தநாடு கிரேக்கமேயாகும். கிரேக்கம் கற்றுக்கொடுத்த மேடைப் பேச்சுமுறை, ரோம் நகரம் புகுந்து அங்குச் சிறந்து விளங்கியது. பிறகு பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து முதலியநாடுகளில் பரவிற்று. இங்கிலாந்திலேதான் இன்றைய நிலைக்கு ஏற்ப அது செம்மையாகப் பண்படுத்தப்பட்டது.

சொற்பொழிவாற்றும் கலையை, ஒரு கலையாக ஆக்கி, அதில் பயிற்சி கொடுக்க முனைந்த முதல் சொற்பொழிவாளர், கிரேக்க நாட்டின் சிரக்யூஸ் நகரத்தில் கி. மு. ஐந்தாவது நூற்றாண்டுக்கு முன்பு தோன்றிய கோராக்ஸ் என்பவரேயாவார். தத்துவக்கருத்துக்களை பேச்சுக் கலையின்மூலம் நாடெங்கும் பரப்ப முயன்ற ஏதென்ஸ் நகரத்துத்தத்துவப் பேரறிஞர்கள், சிறந்த சொற்பொழிவாளர்களாகத் திகழ்ந்ததோடு, மேடைப் பேச்சுக்கலையைப் பயிற்றுவிக்கும் பேராசிரியர்களாகவும் திகழ்ந்தார்கள். கிரேக்க நாட்டில் மேடைப்பேச்சுக் கலையை வளர்த்த பெருஞ்சொற்பொழிவாளர்கள் பெரிகிளீஸ், சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாடில், டெமாஸ்தெனீஸ் போன்றவராவார்கள். அவர்கள் சிறந்த மேடைச் சொற்பொழிவுக்கான இலக்கணத்தையும், பயிற்சிக்கான முயற்சிகளையும் செம்மையாக வகுத்தார்கள்.

மேடைப் பேச்சின் மூலம் புகழெய்த விரும்பாதார், நல்லறிவு படைத்தவர்களில் யாருமே இருக்க முடியாது. மேடைப் பேச்சில் உயர்ச்சியடைய விரும்புவோர், மேடைப் பேச்சுப் பயிற்சியில் பண்பட்டேயாக வேண்டும்; அந்தப் பயிற்சிக்குச் சிலபல முயற்சிகள் இன்றியமையாது வேண்டப்படுகின்றன.

சிறந்த சொற்பொழிவாளராக ஆக விரும்புவோர்க்கு அடிப்படையாக இருக்க வேண்டிய முக்கிய பண்பு, மேடைப்பேச்சினிடத்து உண்மையான ஆர்வமும், நேர்மையான மதிப்பும் ஆகும். மேடைப்பேச்சுக்குத் தன்னறிவிலும்-ஆற்றலிலும் ஒருவருக்கு ஏற்படும் தன்னம்பிக்கையே முக்கிய அடிப்படையாகும். தன்னம்பிக்கை ஏற்படாவிட்டால், இயற்கையாக ஏற்படக்கூடிய அவைஅச்சம், உடல்நடுக்கம், கோழைமை, மனக்கூச்சம் ஆகியவை போகா. தன்னம்பிக்கையைப் பெருக்கிக் கொள்வதால், இந்தக்குறைபாடுகள் சிறிது சிறிதாக நீங்க வழிஏற்படும்.

மேடைப்பேச்சுக்கு உள்ளஉறுதியும், உடல் வலிவும் மிகமிக வேண்டற்பாலனவாகும். மேடைப் பேச்சாளர்க்குச் சோர்வு ஒரு குறைபாடாக இருக்கக்கூடாது. உடற்சோர்வு, மனச்சோர்வு, சொற்சோர்வு, கருத்துச் சோர்வு ஆகிய எந்தச் சோர்வும், எந்தவகையிலும், நாநலம் போற்றும் நாவலரைப் பற்றக்கூடாது.

உலகப்பேச்சாளர்களின் பட்டியலைப் புரட்டிப் பார்த்தால், பெரும்பாலோர் உடல் உறுதியும், அதன் மூலம் உள்ள உறுதியும் பெற்றவர்களாகவே காணப்

படுவார்கள். பிளேட்டோ, அரிஸ்டாடில், சிசரோ, சீசர், மார்க் ஆன்டோனி, புருடஸ், பர்க், வெப்ஸ்டர், ஆப்ரகாம் லிங்கன், ராபர்ட் கிரீன், இங்கர்சால், சார்லஸ் பிராட்லா, கிளாட்ஸ்டன், லெனின், ஹிட்லர், சர்ச்சில், சி. ஆர். ரெட்டி, பெரியார் ஈ.வெ. ராமசாமி, டாக்டர் டி. எம். நாயர், சுபாஷ் சந்திரபோஸ் ஆகியோர் இந்த வகையில் சிறந்த எடுத்துக்காட்டாவார்கள்.

பொதுமேடைப் பேச்சாளர்கள், பேச்சாற்றலின் நயத்தை நன்கு புரிந்துகொள்ள வேண்டும். குரல், முகம், கைகள், உடல் ஆகியவைகள் எளிதாகவும், ஏற்ற வண்ணமும் சொற்பொழிவோடு பொருந்தி வர வேண்டும். குரலும், சொற்பொழிவை வெளிப்படுத்தும் வகையும், இயற்கைச் சூழ்நிலைகள் சரியாக அமையாத நிலையிலும் அழகாக அமையும் வண்ணம் பண்படுத்திக் கொள்ளவேண்டும். உலகப் பேச்சாளர்கள் அத்துணைப்பேரும் இந்த வகையில் தங்களைத் தாங்களே திருத்திக் கொள்வதில் சிறிதும் சளைக்காதவர்களாகவே இருந்து வந்துள்ளார்கள். கிரேக்க நாட்டுச் சொற்பொழிவாளர்களிலே மிகச் சிறந்தவர் என்று போற்றிப் பாராட்டப் பட்டவரான டெமாஸ்தெனீஸ், சிறு வயதிலிருந்தே அச்சம்-கூச்சம்-கோணல்- நாணம் மிகவுடையதராய்த், திக்கித்திக்கிப் பேசும் இயல்புடையவராய்ப், பேசும்போது தோள்கள் இரண்டும் மேல் ஏறி இறங்கும் தன்மையுடையவராய்த் திகழ்ந்தாராம். இப்படிப்பட்ட அருவருக்கத்தக்கப் பண்புகளை இயல்பாகவே கொண்டிருந்த டெமாஸ்தெனீஸ், எதென்ஸ் நகரத்தின் மீது மாசிடோன் நகரத்து மன்னனான பிலிப் என்பான் படையெடுத்து வந்த பிற்காலத்தில், அவனுக்கு எதிராக, எதென்ஸ் நகரமக்களைத் தன் நாவன்மையால் திரண்டெழுச்செய்து, மாற்றாரை விரட்டி யடித்தும் மண்டியிடச் செய்தும், எதென்ஸ் நகரை மீட்டார் என்று கேள்விப்படுகிறோம் என்றால், அவர் எப்படிப் பட்ட உழைப்பால் உயர்ந்தோராகியிருக்க வேண்டும் என்பதை ஒருவாறு நன்கு அறிந்துகொள்ளலாம். அவர் தம்முடைய திக்குவாயைத் திருத்திக் கொள்ளவும் கூச்சத்தைப்போக்கிக்கொள்ளவும் கடற்கரையில் நின்று கொண்டு, வாயில் கூழாங்கற்களை அடக்கிக் கொண்டு கடலலைகளை நோக்கிப் பேசுவாராம். ஏறி இறங்கும் தோள்களை மட்டுப் படுத்த, தோள்களுக்கு நேரே கூரிய வாள்களை, அவற்றின் கூரிய முனைகள் தோள்களைத் தொட்டுக் கொண்டிருக்கும் வண்ணம் கட்டித் தொங்க விட்டுவிட்டு, நிலைக் கண்ணாடியின் முன் நின்று பேசிப் பார்ப்பாராம். தோள் மேல் எழும்போதெல்லாம், வாள் முனையில் பட்டு அதனால் வலி புண்டாக, வலி தாளாமல் தோள் மீண்டும் மேலெழும்புவது தானாக நின்றதாம். இப்படியாக உள்ளத்தில் ஏற்பட்ட உறுதியும், தன்னம்பிக்கையும் டெமாஸ்தெனீஸை உலகப்பேச்சாளர்களிலே உயர்ந்த ஒருவராகக் கொண்டு சேர்த்தன.

கிரேக்கம் தாழ்ந்து, ரோம் வல்லரசு உயர்ந்தோங்கிய காலத்தில் ரோம்நகரத்துப் பெரும் பேச்சாளனான சிசரோ, பேச்சுக் கலையில் தன்னைத் தயாராக்கிக் கொள்ள எவ்வளவோ அரும்பாடுபட்டுள்ளான்.

சாத்தம் என்பவர் நிலைக் கண்ணாடியின் முன் நின்று பேசிபேசித் தன்னைச் சிறந்த நாவலராகத் தயாராக்கிக் கொண்டாராம்.

ஹென்றிகளே என்பார் வயல்வெளியிலும், காடுகளிடத்தும், குதிரை-மாட்டுத் தொழுவங்களிலும் நின்று சொற்பொழிவாற்றிப் பேசும் நயத்தைப் பெற்றாராம்.

பீச்சர் என்னும் சொற்பொழிவாளர் திறந்த வெளியில் நின்று, நெடிலெத்துக்களைப் பல உச்சரிப்புகளில் உரக்கச் சொல்லிப் பார்ப்பாராம்

காலஞ்சென்ற வைசிராய் கர்ஸான் தம்முடைய பேச்சுகளை எழுதி மனப்பாடம் செய்துகொண்டு, நயக் தோன்ற பேசுவாராம்.

இங்கிலாந்து நாட்டுப் பெரு நாவலர்களான டிஸ்ரேலி, கிளாட்ஸ்டன், பிரைட் போன்றோரும் அமெரிக்க நாட்டு நாவலர்களான ஆப்ரகாம் லிங்கன், உட்ரோ வில்சன், ரூஸ்வெல்ட் போன்றோரும் சொற்பொழிவுகளை முன் கூட்டியே எழுதிப் பார்த்து, மனதில் பதிய வைத்துக் கொள்ளும் தன்மையுடையவர்களாம்.

இங்கிலாந்தின் பிரதமரான வின்ஸ்டன் சர்ச்சில் தம்முடைய பேச்சை முன்கூட்டியே தயார் செய்து, மனதில் பதியவைத்துக் கொண்டு, சிறு குறிப்புகளின் உதவிகொண்டு மெருகேற்றி, மெருகேற்றிப் பேசுவாராம்.

நம்நாட்டில், கருத்துக்களைச் சொல்லும் முறை தேர்ந்து, நிரல்படக்கோர்த்து மனதில் திட்டமிட்டுக் கொண்டும், சமயத்திற்கேற்ற வாறும் பேசும் காலஞ்சென்ற நாவலர்களில், டாக்டர் சி. ஆர். ரெட்டி, எஸ். சத்தியமூர்த்தி அய்யர், திருபாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள், மா. ரா. குமாரசாமியார் ஆகியோராவர் என்று கூறுவர்.

ஒரு பேச்சாளனின் மேடைத்தோற்றம் கவர்ச்சிகரமாக இருக்கவேண்டும். அது பெரும் அளவில் சிறந்த பேச்சாளனாவதற்கு வழி செய்வதாக அமையும். காந்தியார், ரவீந்தரநாத் தாகூர், பெரியார் ஈ. வெ. ரா., பெர்னாட்ஷா, சுபாஷ்போஸ், ஸ்டாலின் ஆகியோர் தோற்றங்களிலுள்ள நல்ல கவர்ச்சியை யாவரும் நன்கு கண்டிருக்கலாம்.

சிறந்த பேச்சாளன் என்றால், அவன் பரந்த-ஆழ்ந்த அறிவுடையவனாக இருக்க வேண்டும். முக்கியமாக வரலாற்று அறிவும், இலக்கியத் தேர்ச்சியும் பெற்றவனாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் தக்க எடுத்துக்காட்டுகளையும், பொருத்தமான ஒப்புவமைகளையும் காட்டமுடியும். ரோம்நாட்டுச் சிறந்த நாவலரான சிசரோ பேச்சுத் திறனற்றப் பேரறிவு

"பெரும் அளவுக்குப் பயன்படாது; பேரறிவு அற்றப் பேச்சுத் திறன் ஆபத்தானது" என்று விளக்கந் தந்தார்.

சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், இனிமையாகச் சொல்லல், நல்ல சொற்களை உச்சரித்தல், ஓசைநயத்தோடு கூறல், ஆழ்ந்த அறிவைக் காட்டுதல், நிரல்படத் தொகுத்தல், கேட்போரைத் திகைக்கச் செய்யாமலிருத்தல், விழுமிய கருத்துக்களைக் கூறல் ஆகிய பண்புகளிலே நன்கு தேர்ச்சி பெற்றும், குன்றக் கூறல், மிகைபடக்கூறல், கூறியது கூறல், மாறுகொளக் கூறல், தவறுபடச் சொல்லுதல், மங்கவைத்தல், வெற்றுரவாரஞ் செய்தல், பொருத்தமற்றவற்றைக் கூறல், பேச்சில் சுணங்குதல், பயனில்லாதவற்றைக் கூறல் ஆகிய வேண்டாப் பண்புகளை ஒதுக்கியும் பேசக் கற்றுக்கொள்ள முனைய வேண்டும்.

சிறந்த நாவலனுக்கு நல்ல நினைவுத் திறன் வேண்டும். மிகுதியான சொற்களை அறிந்திருத்தல் மேடைப்பேச்சுக்கு மிக்க வலிவூட்டுவதாகும். மொழிப் பயிற்சியிலே வல்லமை பெற்றிருத்தல், ஒரு பொருளைக் குறித்து அழுத்தந் திருத்தமாகவும், தெளிவாகவும் சொல்லக் கூடிய தன்னம்பிக்கையை ஒருவருக்கு அளிக்க வல்லதாகும்.

வெப்ஸ்டர் என்ற ஆங்கிலப் பெரும் பேச்சாளர் அன்றாடம் அகராதியைப் புரட்டிப் பார்ப்பதும், அதிலுள்ள சொற்களோடும் சொல்லின் பொருள்களோடும் தன்னைத் தொடர்புபடுத்திக் கொள்வதும், அவருடைய சிறந்த பழக்கமாக இருந்து வந்ததாம். இந்தியத் துணைக்கண்டத்தில் சிறந்த ஆங்கிலப் பேச்சாளர்கள் என்ற பெயர்பெற்ற காலஞ்சென்ற வி.எஸ்.சீனிவாச சாஸ்திரியாரும், எஸ்.சத்தியமூர்த்தி அய்யரும் எப்பொழுதும் அகராதியைப் புரட்டிக் கொண்டிருக்கும் பண்புடையவர்களாம்.

மேடைப்பேச்சில் மிடைந்து காணப்படும் கருத்துக்கள் வாதமுறையில் பின்னப்பட்டுக் கோர்த்து வாங்கப்பட வேண்டும். ஒரு கருத்திலிருந்து வேறோர் கருத்துக்குத் தாவும் முறை, அழகாகவும், எளிதாகவும், தொடர்பாகவும், பொருத்தமாகவும் அமைதல், தனிக் கவர்ச்சியைத் தருவதாகவும் இருக்கும்; கேட்போர்க்குத் தெளிவு பயப்பதாகவும் இருக்கும். டெமாஸ்தெனீஸ், சிசரோ, பர்க், வெப்ஸ்டர், இங்கர்சால், அண்ணாத்துரை ஆகியோரிடம் அழகுபட இப்பண்பைக் காணலாம்.

எதுகையும் மோனையும், உவமையும் உருவகமும், அணியும் அமைப்பும் வலிந்து பொருந்துவதாக இல்லாமல், இயல்பாகவே ஊற்றெடுப்பதாக அமையின், பேச்சு பேரின்பம் பயப்பதாக இருக்கும்.

கற்பனைத்திறன், மேடைக்கவர்ச்சி, புண்பொழுக்கம், அன்புள்ளம், அருள்நோக்கம், அஞ்சாமை, உண்மைக்குப் பரிந்துபேசும் பான்மை, சுயநலமின்மை, அடக்கம், பொறு… , கருத்து வலிமை, திண்ணிய நம்பிக்கை, கொள்கைப்பற்று ஆகியவற்றின் நிலைக்களனாக விளங்குபவனே சிறந்த சொற்பொழிவாளனாகத் திகழ்வான்.

பெரும் பேச்சாளரின் பேச்சுக்களை அடிக்கடி கேட்டு, எந்த எந்த காரணங்களால் அவர்களுடைய பேச்சு நயம் சிறந்து விளங்குகின்றது என்று கண்டு கொண்டால், அத்தகைய நயம் தம்மிடத்தேயும் படிய, பல இளம் பேச்சாளர்க்கு வழியேற்படும். நாநலம் படைத்த நல்லிசைபுகழ் நாவலர்களின் பேச்சுக்களை அன்றாடம் வாய்விட்டு உரக்கப்படிப்பதன் மூலம் சொற்பொழிவாற்றும் திறமையை ஒருவர் எளிதி பெறக்கூடும். தனது கருத்துக்கிசைந்த சி சொற்பொழிவாளரை எடுத்துக்காட்டாகக் கொண் அவர் போலப் பேசப் பழகிக் கொண்டால், சிறந்த முறையில் பேசும் பழக்கம் விரைவில் பிடிபட வழியேற்படும்.

இன்றைய நிலையில், தமிழகத்தைப் பொறுத்த வரையில், ஆங்கிலத்தில் சிறந்த பேச்சாளராகக் காணப்படுபவர்களும், பிறர்க்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர்களும் டாக்டர் ஏ.ராமசாமி முதலியார், டாக்டர் ஏ.லக்ஷ்மணசாமி முதலியார், டாக்டர் ஆர்.கே. சண்முகம் செட்டியார், அறிஞர் சி.என்.அண்ணாத்துரை, டாக்டர் ஏ.கிருஷ்ணசாமி, வழக்கறிஞர் டி.செங்கல்வராயன், சி.இராசகோபாலாச்சாரியார், சர்.சி.பி.ராமசாமி அய்யர், மோகன் குமாரமங்கலம் ஆகியோராவர்.

இன்றைய தமிழகத்தில், தமிழில், பொது மேடைப் பேச்சாளர்களாக நின்று நிலவும் சொற்பொழிவாளர்களிலே. தலைசிறந்த சிலரும், ஆரம்பப் பேச்சாளர்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாவார்கள்.

பாமர மக்களுக்குப் புரியும் வண்ணம் எதையும் விளக்கிக் காட்டிப், பசுமரத்தில் அறையும் ஆணி போல் மக்கள் உள்ளத்தில் பதியச்செய்து, மணிக்கணக்கில் பேசி, இறுதிவரையில் மக்கள் திரளைத் தன் வயப்படுத்தும் ஆற்றல், பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களிடம் விளங்கக் காணலாம்.

அழகு தமிழில், ஆற்றொழுக்கென, உயிருடைச் சொற்களை நடமாடவிட்டுக், கேட்போர்க்கு இன்பம் பயக்கும் தன்மையதானச் சொற்பொழிவைத் தமிழ்ப் பெரியார் திரு. வி. கல்யாணசுந்தரனார் அவர்களிடம் கேட்கலாம்.

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும், வேட்ப மொழிவதாஞ் சொல்" என்ற வள்ளுவரின் வாக்குக்கு ஓர் இலக்கியமாய் நின்று, நாணயச்சாலையில் தங்கு தடையின்றி ஒன்றன் பின் ஒன்றாக அழகுபட வெளிவந்து விழும் நாணயங்களைப் போல், சொற்களை வெளியிட்டு, ஓசைநயத்தோடு, கருத்தாழம் பொலிய, மாற்றார் வெட்கிப் புன்முறுவல் பூக்கும்

வண்ணம் கே[illegible]டலும் விரவச் செய்து, மின்னல் வெட்டுப்போல் நகைச்சுவைகளை ஆங்காங்கு தோன்றச் செய்து, மக்களைப் பெருமளவுக்கு ஈர்க்கும் ஆற்றல், அறிஞர் சி. என். அண்ணாத்துரை அவர்களின் அரிய சொற்பொழிவுகளில் பொதிந்து கிடக்கக் காணலாம்.

இலக்கியத் தமிழின் இன்பத்தைப் பிழிந்தெடுத்து, எதுகை மோனை நயம் சிறந்து விளங்க, பெருமிதத்தோடு 'விரிவுரையாற்றும் பண்பு, பேராசிரியர் ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்களிடம் திகழ்கின்றது.

வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல், [illegible]ணர்ச்சிவயப்படாமல் அமைதியான முறையில். நயம்[illegible], உவமான உவமேயக் குட்டிக்கதைகளோடு கருத்துக்களைக்கூறி கூடியிருக்கும் மக்களனைவரையும் செவி கொடுத்துக் கேட்கும்படிச் செய்யும் நலன் முதலமைச்சர் சி. இராசகோபாலாச்சாரியார் அவர்களிடம் விளங்குகின்றது.

சொற்களை அளந்து. கருத்துக்களை நிரல்படக் கோர்த்து, பெருமித ஓசையோடு, மேடைத் தோற்றத்தைச் சிறக்கச் செய்து பேசும் ஆற்றல் சொல்லின் செல்வர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களிடம் காணப்படுகின்றது

தமிழ் ஆராய்ச்சித் திறத்தோடு. வாதிட்டுக்கூறும் வல்லமை விளங்க, சொற்களை அழுத்தந்திருத்தமாகவும், ஆவேசமாகவும், உணர்ச்சி பொங்கவும் வெளியிடுச் சொற்பொழிவாற்றும் திறனை நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்களிடம் கண்டறியலாம்.

தொழிலாளர்களைத் தட்டி எழுப்பி. எழுச்சியுற்ற அவர்கள் திரளும் முறையில், உணர்ச்சி வேகத்தோடும், நல்லார்வத்தோடும், கண்டார்-கேட்டார் மெய் சிலிர்க்கும் வண்ணம் முழங்கும் ஆற்றல், புரட்சிப் பேச்சாளர் ப. ஜீவானந்தம் அவர்களிடம் மிளிரக் காணலாம்.

நகைச்சுவை ததும்ப கருத்துக்களைக் கோர்த்து, இடையிடையே சுவையூட்டும் பாட்டுகளைப்பாடி, கூடியுள்ள மக்களை மகிழும்படி செய்வது நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் பண்பாகும்.

இலக்கியங்களை நயம்படக் கிளர்ந்து கூறி, சுவைகளை அழகுற எடுத்துக் காட்டி, ஆற்றொழுக்கென எளிய-அழகிய தமிழில் சொற்பொழிவாற்றும் பாங்கினைப் பண்டிதமணி கதிரேசஞ் செட்டியாரிடம் பரக்கக் காணலாம்.

இப்படிப்பட்டோரது மேடைப் பேச்சுக்களைத் திரும்பத் திரும்பக் கேட்பதன்மூலம் இன்றைய இளம் பேச்சாளர்கள், தங்கள் போக்குகளை ஏற்றமுறையில் திருத்திக் கொள்ளலாம். பிறரைப் பார்த்துப் பழகும் முறையால், ஒரு நிலைக்கு உந்தப்படும் இளம்பேச்சாளர்கள். நாளடைவில், தமக்கே உரிய தனி வழியை உருவாக்கிக் கொள்ளவும் ஏதுவாக இருக்கும். பிறகு மேலும் மேலும் பயிற்சி பெற, ஒவ்வொருவரும் தாமே ஒவ்வோர் வகைக்குச் சிறந்த இலக்கியங்களாக நின்று திகழவுங்கூடும்.

உழைப்பின் வாரா. உறுதிகள் உளவோ என்ற தன்னம்பிக்கையோடு முயலும்பலரும் சிறந்த சொற்பொழிவாளராக மலரக்கூடும். மக்களின் அறிவைத் தொட்டு இதயநாடிகளைத் தடவும் ஒவ்வொரு பேச்சாளனும் சிறந்த சொற்பொழிவாளர் பட்டியலிலே சேர்க்கப் படுவர் என்பது உறுதி!

எனவே மேடைப் பேச்சுக்கும் பயிற்சி தேவை! மிகமிகத்தேவை; "செந்தமிழும் நாப்பழக்கம்" ஆதலால்.

பயன்படும் சொற்றொடர்

தமிழ் இலக்கிய மேடை ஏறிச் சொற்பொழிவாற்றுவோரில் பலர் தாம் எடுத்துக் கொண்ட பொருளைப் பற்றிக் குறிப்பிடும்போது அதனைச் சுருக்கிச் சொல்லுவது என்பதும் ஆகாது அதனை விரித்துச் சொல்லுவது என்பதும் இயலாது என்பதைக் கூற விரும்புகிறார்கள். அதற்கு ஒரு சொற்றொடரைப் பயன்படுத்திவருகிறார்கள். அதுதான் "**விரிப்பின் அகலும் தொகுப்பின் எஞ்சும்**" என்பதாகும்.

இந்தச் சொற்றொடரை முதன் முதலில் பயன்படுத்தியவர் சங்ககாலப் புலவர்களில் ஒருவரான **பொருந்தில் இளங்கீரனுர்** என்பவர். அவர் கபிலர் என்ற பெரும்புலவரைப் பற்றிச் சிறப்பித்துக் கூறவிரும்புகிறார். அவருடைய சிறப்பைக் கூறுவது இரண்டு வழியிலும் தனக்கு இயலுவதாக இல்லை, என்பதை உணர்ந்து வந்த இளங்கீரனுர் அச்சொற்றொடரை அழகுபடக் கூறுகிறார்.

மூதறிஞர் கைவல்[redacted]

பகுத்தறிவு இயக்கம் தமிழகத்திலே பரவவும், வேரூன்றவும், மூலகாரணமாக நின்றவர்களிலே முக்கியமான ஒருவரும், மூதறிஞரும் ஆன கைவல்யம் அவர்கள், இயற்கை எய்தினார் என்ற செய்தி துயரத்தையும் துக்கத்தையும் ஆற்றொணா அளவில் அளிக்கின்றது. விலை மதிக்க முடியாத பொருளை இழந்து விட்டதால் ஏற்படும் ஏக்க உணர்ச்சி உள்ளத்தைக் கப்பிக்கொள்கிறது.

கைவல்யம் அவர்களை இன்றைய இளைஞர் உலகம் நேரிடையாக அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறவில்லை. தன்மான இயக்கத்தில் நெடுகாலையத் தொடர்புடையோர் அனைவரும், கைவல்யனார் அவர்கள் ஊட்டிய மெருகு, எந்த அளவுக்கு இயக்கத்தை ஒளி வீசச் செய்தது என்பதை நன்கு உணர்வார்கள்.



கறுத்த மேனி, வெளுத்த தலை, உயர்ந்த தோற்றம், பரந்த நெற்றி, குவிந்த கண், குறுகுறுத்த பார்வை, நீண்ட மூக்கு, நெடிய கழுத்து, வெற்றிலைப்பாக்கு வாய், வெள்ளிய உடை, கையிலே வலுவான தடி, காலிலே அழுத்தமான செருப்பு விழாத பற்கள், உதிராத தலைமயிர், பெரும் போக்கு, பெருமித நடை, ஆழ்ந்த சிந்தனை, ஆத்திரப் பேச்சு, எழுபத்தைந்தைத் தாண்டிய வயது, சாமியார் தோற்றம்! நம் கண் முன்னே நடமாடிக்கொண்டிருந்த இயற்கை ஓவியம் அழிந்து விட்டது.

நாடெங்கும் பரவிக்கிடந்த பகுத்தறிவாளர்களுக்கு வெடி குண்டுகளைத் தயார் செய்து கொடுத்து, மாற்றார்களை வெல்லுவதற்கு உறுதுணையாக நின்ற வெடி மருந்துச் சாலையே கைவல்யமாவார்கள். "வெட்டாத சக்தியினை வீசாக் கையால் வெடுக்கென்று தூக்கி எம்மை வீழ்த்தப் பார்க்கும் முட்டாள்கள்-வைதிகர்கள்-குருக்கள் சூழ்ச்சி முளையிழியக்கட்டோடு சமத்துவத்தை நாடும் இன்பக் கருத்தளிப்பேன்" என்ற முறையில், புராணம்-இதிகாசம்-சாஸ்திரம் ஆகியவற்றை அக்குஅக்காக ஆராய்ந்து அறிவு கொளுத்தியவர் சாமி கைவல்யமாவார்கள்.

கைவல்யம் அவர்கள் 1867ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் மலையாளத்தைச் சேர்ந்த கள்ளிக்கோட்டையில் பிறந்தவர். அவருடைய முன்னோர்கள் படை வீரர்களாகப் பணியாற்றியவர்கள். அவருடைய தந்தையாரும், உடன் பிறந்த ஆடவரும் சுகவாழ்க்கையுடன், வேதாந்த ஆராய்ச்சிப் புலமையில் மிக்கத் தேர்ந்தவர்களாக இருந்தார்கள். அவர் தமது ஐந்தாம் வயது வரை கள்ளிக்கோட்டையிலும், ஐந்து முதல் பதினோராம் ஆண்டு வரையில் பாலக்காட்டிலும், பதினோராம் ஆண்டு முதல் பதினான்கு வரையில் மதுரையிலும், பதினான்கு முதல் பதினெட்டு வரை திருச்சியிலுமிருந்தார். திருச்சியில் இரண்டாவது பாரம் வரையில் படித்து விட்டு மேலும் படிக்க விரும்பாமல், கோவை மாவட்டத்திற்குச் சென்று விட்டார். இந்த நிலை வரையில் அவருடைய பெயர், பொன்னுச்சாமி என்றும், செல்வப் பெயராகப் பொன்னு என்பதாகவும் அழைக்கப்பட்டது. இதற்குப் பிறகு அவர் சாமியார் கோலம் பூண்டு இந்தியா முழுவதும் சுற்றினார்.

இவரது சுற்றுப்பிரயாணத்தில் கரூருக்குச் சென்றிருந்த சமயம், அங்குள்ள மௌனசாமி மடத்திற்குப் போயிருந்தார். அந்தமடத்திலுள்ள சாமியாரிடம் பலர் வேதாந்த விசாரணைக்கு வந்து, பலபொருள்கள் பற்றித் தெரிந்து கொண்டு போவதில், கைவல்யம் என்ற நூலைப் பற்றியும் பலர் பேசுவதுண்டு. அப்பொழுது

கைவல் [illegible] என்னும் பொன்னுச்சாமியார் அதில் முக்கியமான பங்கு எடுத்துக் கொண்டு சற்று அதிகமாக விவாதம் புரிவார். ஒரு சமயம் அவர் அங்கில்லாத போது, அங்கு வந்தவர்களில் ஒருவர் "**கைவல்ய சாமியார் எங்கே?**" என்று கேட்டாராம். அப்போது அவரும் அங்கு வர, அங்கிருந்தோர், "இதோ கைவல்ய சாமியார்" என்றார்களாம். அது முதல் அவருக்கு அந்தப் பெயர் வழங்கி வருவதாயிற்று.

அவருக்கு தர்க்க உணர்ச்சி ஏற்பட்ட லமுதல், எந்தக் காரணத்தாலோ, பார்ப்பன தக்கொள்கைகளை வெறுப்பதும், அவைபற்றிய ஆதாரங்களைத் தர்க்கிப்பதும் அவருக்கு ஊக்கம் தருமொரு பழக்கமாகிவிட்டது. அந்தக் காலத்தில் சங்கராச்சாரியார் கோயமுத்தூர் மாவட்டத்தில் சுற்றுப்பிரயாணம் செல்லுமிடங்களில் எல்லாம் சென்று, அவருக்கு எதிரிடையாகப் பிரச்சாரம் செய்வதும், அவர் மதக் கொள்கையைக் கண்டிப்பதும், முக்கியமாய்ப் பராசர் ஸ்மிருதிக்கும், மனுதர்ம சாஸ்திரத்துக்கும் மாறுபாடாகப் பேசுவதுமான வேலைதான், அவர் முதன் முதலில் பொதுப் பணியாகச் செய்த வேலையாகும்.

நாளடைவில் கைவல்ய சாமியார் அவர்களிடம் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பெரியதனக்காரர்களும், பெருநிலக் கிழாரும், மிட்டாதாரும் மிராசுதாரரும், ஜெமீன்தாரர்களும், பட்டக்காரர்களும், பெரிய பெரிய அதிகாரிகளும் நன்மதிப்பு வைத்து, அவருடைய நட்பைப் பெறுவதிலே பெருமிதம் காட்டி வந்தனர். கடைசிக் காலத்தில் கூட அவருடைய இருப்பிடங்கள் பழையகோட்டை பட்டக்காரர் பங்களா, கோவை ஜி. டி. நாயுடு பங்களா, தூக்கநாயக்கன்பாளையம் கவுண்டர் மாளிகை ஆகியவைகளேயாகும். சாமியாரின் வாதிடும் வல்லமைகண்டு, புராணப்பண்டிதர்கள், வித்துவான்கள், புராண இதிகாசப் பிரசங்கிகள் ஆகியோர் எல்லோரும் கதிகலங்கி விடுவார்கள். பழைய பண்டிதர்களை முறியடிக்க வேண்டிவந்ததால், சாஸ்திர இதிகாசப்புராணங்களில் நல்ல தேர்ச்சி பெறவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்தப்படிக்குத் தம்மைத் தயாராக்கிக்கொள்ளவும் செய்தார். புலமையோடு வைத்தியமும் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்திலிருந்தார்.

1903-ம் ஆண்டிலிருந்து கைவல்ய சாமியாருக்கும், பெரியார் ராமசாமிக்கும் நட்புறவு வளர ஆரம்பித்ததாம். கொள்கையில் இருவரும் நெருங்கி இருந்தனர். பெரியார் சுயமரியாதை இயக்கம் கண்டபோது, அதற்கு உறுதுணையாக நின்றவர்-அதனைவளர்த்தவர் கைவல்யமாவார்கள்.

கைவல்யம் அவர்கள் காரம் அதிகமாகச் சாப்பிடக் கூடியவர்கள்; அதற்கேற்றாற்போல் முன்கோபம் மிகவுடையவர். ஒரு சமயம் ஏனம்பள்ளி ஜமீன்தார் திருமணத்திற்குக் கைவல்யம் அவர்கள் சென்றிந்தாராம். சாப்பாட்டுப் பந்தியில். பரிமாறின பார்ப்பனன் ஒருவனைக் குடிக்கத் தண்ணீர் கேட்டபோது, அவன் பந்தியில் வைக்கப்பட்டிருந்த டம்ளரைக் கையில் எடுத்தானும். உடனே பக்கத்திலிருந்த மற்றொரு பார்ப்பன சமையல்காரன் இந்தப்பார்ப்பனனைப் பார்த்து "என்னடா மடையா? சூத்திரன் குடித்த டம்ளரைக் கையில் தொட்டுவிட்டாய்" என்று கோபமாகப் பேசினானும். உடனே கைவல்ய சாமியார், சாப்பிட்டுக் கொண்டிருந்தவர் எழுந்து, எச்சில் கையாலே அந்தப்பார்ப்பனனை ஒரு அறை செவுளில் அறைந்து, "யாரடா சூத்திரன்?" என்று கேட்டாராம். அப்போது ஒரு சிறு கலவரமானதாம். பிறகு அந்தப் பார்ப்பனன் மன்னிப்புக் கேட்டுக்கொண்டானும். இம்மாதிரி அவர் வாழ்க்கையில் பலப்பல.

கைவல்ய சாமியார் அவர்களின் அரும் பெருங் கருத்துக்களை காணவேண்டுமென்றால், பழைய "குடியரசு" இதழ்களில்தான் காண வேண்டும். அந்தக் கட்டுரைகளில் சில, "கைவல்யம் அல்லது கலைக்கியானம்" என்று இரண்டு பாகங்களாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

இந்நாட்டு மக்கள் தன்மதிப்புடையோராய் வாழ வேண்டும் என்பதிலே அவருக்கிருந்த ஆவலும், பகுத்தறிவுக் கருத்துக்களை நாடெங்கும் பரப்ப வேண்டுமென்பதிலே அவருக்கிருந்த ஆர்வமும், வாதிட்டு வெல்லுந் திறனைத் தர்க்க முறையிலே இயக்கத்தோழர்கள் அனைவரும் பெற வேண்டும் என்பதிலே அவருக்கிருந்த ஊக்கமும், பாழும் வைதீகத்தை அழித்தே தீரவேண்டும் என்பதிலே அவருக்கிருந்த உறுதியும் போற்றி நமதாக்கிக் கொள்ள வேண்டியவைகளாகும். வாழ்க அவர் புகழ்! வெல்க அவரது நோக்கம்!

—இரா. நெ.

'மே' நாள் வளர்ந்த விதம்

சு. முத்தையா

★

'மே' நாள் என்று கூறப்படும் 'தொழில் உலக விடுதலை நாள்' பிறந்தது, பலர் நினைத்திருப்பது போல் ரஷ்யாவிலல்ல; முதலாளித்துவம் முறுக்குடன்மிருந்து வளர்ந்து வரும் ஐக்கிய அமெரிக்க நாடுகளில்தான் முதல் முதலில் தோற்றம் செய்தது.

'மே' நாள் அமெரிக்காவில் பிறந்து, அயல் நாடுகளில் பரவியது போல ருஷ்யாவிலும் புகுந்ததின் பின்னர்தான் அந்நாட்டுத் தொழில் வர்க்கத்தினர் சார் கொடுங்கோல் ஆட்சியினின்றும் விடுதலையடைந்து பரிபூரண சோவியத் யூனியனை பரிணமிக்கச் செய்ய ஏதுவாயது எனக் கூறலாம். உலக வரலாறு கண்டறியாத உண்மையைச் சாதித்தது மே நாள்: ஊக்கங்குன்றாது, மிருக பலத்திற்குச் சிறிதும் அஞ்சாது போரிடும் சக்திக்கு எந்தக் கொடுமையும் வணங்கி ஒதுங்கி வழிவிடும். பணத்திமிரும், வெறியும் கொண்டு ஆட்சி பீடத்தையே உலுக்கி ஆட்டி வைத்துக் கொண்டிருந்த முதலாளித்துவம், மே தினம் என்றவுடன் மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கி உருக்குலைந் தொடுங்கியது.

தொழிலாளரின் குறைந்த மணி நேர உழைப்புக் கோரிக்கையே, மே நாள் கிளர்ச்சி; அதன் வளர்ச்சி, முடிவில் வெற்றியின் முதிர்ச்சியுமாகும்! மேநாள் எழுச்சி குறிப்பாக அமெரிக்கத் தொழிலாளரின் எழுச்சியாயிருப்பினும்-பொதுவாக அதன் வெற்றி தொழிலாளர் உலகத்திற்கேயாகும்.

தொழிலாளர்களுக்கு அதிகப்படி ஊதியமே முக்கியக் குறிக்கோளாயிருந்துங்கூட, அதிக நேர மிருக உழைப்பினின்றும் விடுதலை பெறவும், தொழிற் சங்கங்களை நிறுவிக் கொண்டு தங்கள் உரிமையை நிலைநாட்டவுமே மேநாள் கிளர்ச்சி உருவாகியது. எட்டு மணி நேரக் குறிக்கோளே மேநாளாகத் திரண்டு வளர்ந்தோங்கிப் பரவியது என்று கூறலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஒரு தொழிலாளி, கோழி கூவுவதற்கு முன்பே எழுந்து தொழிலுக்குச் சென்று, கோட்டான் கூவியபின்னரே இருப்பிடம் சேர்வான். பதினெட்டு-இருபது மணி நேர உழைப்பு அக்காலங்களில் சாதாரண சம்பவமாக இருந்தது.

1806-ம் ஆண்டில் அமெரிக்காவில் பிலெடெல்பியாவில் நடந்த வேலை நிறுத்தத்தில், தொழிலாளர் தலைவர்கள் சதிசெய்தனரென்று கூறப்பட்ட வழக்கில், தொழிலாளர்கள் 19-20 மணி நேரம் உழைத்தனர் என அறியக் கிடக்கிறது.

முதன் முதலில் 1827-ல் 10 மணி நேர உழைப்பை நிர்ணயிக்க வேண்டும் என்று பிலடெல்பியாவில், இயந்திர தொழிற் கழகத்தினர் வேலை நிறுத்தம் செய்தனர். இந்தத் தொழிற் சங்கம்தான் முதன் முதலில் உலகிலேயே தோன்றியதாகும். ரொட்டிக் கிடங்கு வேலைக்காரர்களும்-சராசரி 18 மணி நேரம் உழைத்து வந்தனர். அவர்கள் நிலைமை எகிப்து அடிமையைவிட கொடுமை வாய்ந்ததாயிருந்தது. பத்துமணி நேர உழைப்பே இருக்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் கிளர்ச்சிகளும் எங்கும் எழுந்தன. 1837-ல் அமெரிக்க ஜனாதிபதி வான்பூரன், சர்க்கார் காரியாலங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு 10 மணி நேரஉழைப்பை நிர்ணயம் செய்தார். அடுத்த பத்தாண்டுகளில், தொழில்களிலும் 10 மணி நேர வேலையே இருக்க வேண்டுமென்ற கிளர்ச்சி பரவி, அதைப் பெற்றவுடன் 8 மணி நேரக் கிளர்ச்சியும் ஆரம்பமானது. அதற்காக எங்கும் தொழிற்சங்கங்கள் நிறுவப்பட்டன. சில ஒழுங்கான தொழிற்சாலைகளில் இந்தச் சலுகையும் வழங்கப்பட்டது.

1861-ல் உள்நாட்டுப் போர் உண்டாக அமெரிக்காவிலிருந்த பல தொழிற்சங்கங்கள் மறைந்தன. 1866-ல் தேசிய தொழிற் சங்கம் (National Labour Union) நிறுவப்பட்டு அகில அமெரிக்க தேசிய தொழில்களில் பொதுப் படையாக எட்டுமணி நேரமே சட்டபூர்வமாக

மே[illegible]ண்டும் என்றும், இறுதிவரை வாதாட வேண்டும் என்றும் உறுதி கொள்ளப் பட்டன. வில்லியம் H சில்வில், ஸ்டூவர்ட் இரு வரும் தலைமை தாங்கி நடத்தினர். சில மாகா ணங்களில் 8 மணி நேரத்தை ஒத்துக் கொண் டனர். பிறகு 1868-ல் அமெரிக்க காங்கிரசும் கூட சர்க்கார் தொழில்களில் சட்டமியற்றியது. நேஷனல் லேபர் யூனியன் 1869-ல் அகில உலகரீதியில், பேஸ்லில் கூடிய கூட்டத்தில். எட்டு மணி நேரத்தை வற்புறுத்தியது. அமெரிக்காவில் எட்டு மணி நேரத்திற்காக எழுந்த எழுச்சிக்குரல் உலகில் எங்கணும் எதிரொலித்தது.

1885-ல் கூடிய தொழிலாளர் சம்மேளனம், அடுத்த ஆண்டில் மே முதல் நாளன்று, தங்கள் கோரிக்கையான எட்டு மணி நேர வேலை கவனிக்கப்படா விட்டால், தொழிற்சாலைகளி லிருந்து வெளியேறுவதெனத் தீர்மானித்தது. இதில் முக்கியமாகப் பங்குகொண்டவர்கள் தச்சு-சுருட்டு வேலைக்காரர்களே யாவர். வியப் படையும் வகையில் தொழிலாள வீரர்கள் ஏழு லட்சத்தையும் மிஞ்சினர். ஐக்ய அமெரிக் காவின் எந்த பக்கத்திலும் எல்லா தொழிற் சாலைகளிலும் 8 மணி நேர கோரிக்கைகளை வற் புறுத்தும் சங்கங்களும், லீக்குகளும் தோன்றின. தொழிலாளர்களிடையே விழிப்பும், உணர்ச் சியும், உத்வேகமும், போருக்குரிய துடிப்பும் உண்டாயின. எல்லா ஆண்டுகளையும் விட 1886-ல் 11562 தொழிற்சாலைகளும் 6 லட்சத் துக்கு மேற்பட்ட தொழிலாளர்களும் பாதிக் கப்பட்டனர். அவ்வாண்டில் 1572 வேலை நிறுத்தங்கள் நடந்தன. இவைகளுக்கெல்லாம் தலைமையிடம் சிக்காகோ நகரமாகும்.

எங்கும் புரட்சிமயமாகவே இருந்தது. அதனால் இதனை '**சமுதாயப் போர்**' என்றும், '**முதலாளி மீது வெறுப்பு**' என்றும் கூறினர். இந்த மே நாள் புரட்சியில் பாதிக்தொழிலா ளர்கள் 8 மணி நேர வேண்டுகோளைப் பெற் றனர். கட்டுப்பாடும், கட்சி ஒருமைப்பாடும், கனவையும், நினைவையும், கருத்தையும், கற்பனை யையும், நேரில்காணும் காட்சியாக மலர வைத்தன; தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து தொடர்ந்து வெற்றியைதந்தது.

1886-ம் ஆண்டு மே மாதம் முதல் தேதி யன்று எழுந்த தொழிலாளர் புரட்சி, வரலாற்றியே மிகவும் பாராட்டக் கூடிய மிக முக்கியமான நிகழ்ச்சியாகும். தொழிலாள விரோதிகளும், முதலாளி வர்க்கமும், தொழி லாளர் தலைவர்களையும் தொழிற்சக்தியையும் நிர்மூலமாக்கிவிட வேண்டும் என்று தீவிர முயற்சி எடுத்துக் கொண்டனர். சர்க்கார் உதவி கொண்டு தொழிலாளத் தலைவர் களைக் கைது செய்தனர். இந்த நிகழ்ச்சியில் "வைக்கோல் தொட்டிக்கலவரம்" என்பது பிரசித்தமானது. இது மே4 ம்நாள் நடந்தது. போலீசாரின் மிருகத்தன தாக்குதல்களால் ஆறு தொழிலாளர்கள்இறந்தனர். பலர் காய மடைந்தனர். பிறகு நடந்த கைகலப்பில் 7 போலீஸ்காரர்களும் 4 தொழிலாளர்களும் மாண்டனர். முடிவில் நான்கு மாபெருந் தொழிலாளர் தலைவர்கள் தூக்கிலிடப்பட்டனர். இதைத் தொடர்ந்து முதலாளிகள், சர்க்கார் பலம் தங்கள் வசமிருக்கிறதென்று கருதி இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு, தோற்ற தங்கள் செல்வாக்கை வலியுறுத்த முயன்றனர். தலைவர்கள் தூக்கிலிடப்பட்டும் தொழிலாளர்களின் கோரிக்கை சிறிதும் மட்டுப்படவில்லை. 1888-ல் செயின்ட் லூயி என்ற இடத்தில் கூடிய அமெரிக்கத் தொழி லாளர் சம்மேளனம், 8 மணி நேர கோரிக் கையை வற்புத்துவதெனவும், அதற்காக 1890-ம் ஆண்டு மே மாதத்தில் நாட்டில் எல்லா இடங் களிலும் வேலை நிறுத்தம் செய்வதெனவும் தீர் மானித்தனர். அதற்குச் சாமுவேல் கோம்பர்ஸ் என்பவரைத் தலைவராக நியமித்து, 'தச்சுத் தொழிலாளர் சங்கமே' முதலில் வேலைநிறுத்தம் செய்வதென்றும்-பின்னர் மற்ற தொழிற் சங்க உறுப்பினர்கள் பின்பற்ற வேண்டு மென்றும் முடிவு செய்யப் பட்டது. 14-7-1889-ல் பாஸ்டைல்வீழ்ச்சியின் நூற்றுண்டு தினத்தைப் பாரிசில் கொண்டாட பல பாகங்களிலிருந்தும் வந்திருந்த கூட்டத்தில், கோம்பர்சின் முயற்சி யால், 1890 ம் ஆண்டு மேதினத்தை அகில உலக தொழிலாளர் நாளாகக் கொண்டாடு தெனத் தீர்மானிக்கப்பட்டு அவ்வாறே [illegible] கெங்கும் எட்டு மணி நேரக் கோரிக்கை [illegible] புறுத்தப்பட்டது. எனவே 1890-ம் ஆண்டி தான் மே தினம். அகில உலக ரீதியில் கொ[illegible] டாடப்பட்டது. அகில உலக ரீதியில் தொ[illegible] டாடப்பட்ட போது, தொழிலாளர்கள் ம[illegible] மில்லாது உழவர்களும் எட்டு மணி நேர கோ[illegible] கையை வற்புறுத்த வாய்ப்பு ஏற்படடது.

1900 ஆண்டில் இன்டர் நேஷனல் [illegible] கிரஸ் பாரிசில் மறுமுறை கூடி, மே நா[illegible]

கொண்டாடியது. எங்கும் வேலை நிறுத்தங்கள் ஆயின, பிறகு மே நாள் செந்நாள் என்றும் அழைக்கப்பட்டது. முதலாளிகளும், ஆளும் வர்க்கத்தினரும் இந்நாளை மிகவும் திகிலோடும் கவலையோடும் கவனித்தனர். ரஷ்யாவில் 1896ல் மே நாள் கொண்டாடிய போது, லெனின் சிறையிலிருந்து கொண்டு—மே நாள் அறிக்கையொன்றை வெளியிட்டார். மே நாள் ரஷ்யாவின் விடுதலைக்கும், சார் கொடுங்கோல் வீழ்ச்சிக்கும் அடிகோலியது என்பது முற்றும் பொருந்தும். இது போன்று மற்ற நாடுகளிலும் மேநாளானது புரட்சிக்கு வித்திட்டு, பலத்தையும் நம்பிக்கையையும் அளித்து வந்திருக்கிறது—தாங்கள் தொடுக்கும் அறப்போரில்தான், தொழில் உலகம் மக்களுக்கு எதிர் காலத்தில் அமைதியும் நிம்மதியும் நிறைந்த ஒரு சமுதாயத்தை நிர்மாணிக்கக் கூடுமென்ற ஒரு பொதுநல எண்ணத்தைத், தொழிலாளர்கள் மேற்கொள்ள, மே நாள் வாய்ப்பு அளித்தது. 8 மணி நேர கோரிக்கையே மே நாள் என்றாலும் அகில உலகத் தொழிலாளர்கள் ஒருமைப்பாடு, எல்லோருக்கும் பொது வாக்குரிமை, சாம்ராஜ்ய எதிர்ப்பு, குடியேற்ற நாடு எதிர்ப்பு, தேசிய கைதிகள் விடுதலை தொழிலாளர்களின் அரசியல் பொருளாதார விடுதலை, அதிக ஊதியம், சுயநிர்ணய உரிமை முதலியவைகளும் அங்கங்கே மே நாளில் வற்புறுத்தப்பட்டன—வற்புறுத்தப்பட்டு வருகின்றன.

விற்பனையாளர்க்கு

அதிகப் பிரதிகள் வேண்டுவோர் அதற்கான முன் பணம் அனுப்பியாக வேண்டும்.

நிர்வாகி "மன்றம்"

சிதைந்த வாழ்வு

சமுதாயத்திலுள்ள மூடநம்பிக்கை, வாழ்க்கையை எப்படிச் சீரழித்தது என்பதை விளக்கும் சீர்திருத்த நாடகம்.

விலை ரூபாய் 1—4—0

நிர்வாகி,

ஞாயிறு நூற்பதிப்பகம்,

பாண்டிச்சேரி.

மன்றம்

[திங்களிருமுறை வெளியீடு]

கட்டண விபரம்:

	உள்நாடு	வெளிநாடு
	ரூ. அ. பை	ரூ. அ. பை.
ஒரு ஆண்டுக்கு	6—0—0	7—8—0
ஆறு மாதத்திற்கு	3—0—0	3-12—0
தனி இதழ்	0—4—0	0—5—0

விளம்பர விகிதம்:

வெளிப்புற அட்டைக்கு	ரூ.	150—0—0
உட்புற ,,	ரூ.	125—0—0
முழுப்பக்கத்திற்கு	ரூ.	100—0—0
அரைப்பக்கத்திற்கு	ரூ.	50—0—0

விபரங்கட்கு:—

நிர்வாகி, "மன்றம்", மண்ணடி, சென்னை-1.

உடுப்பு எடுப்பாய் இருக்க!

சுந்தரம்

தையற்கடையே சிறந்தது!

அழகான அமைப்பு!
அளவான வெட்டு!
உறுதியான தையல்!

வருக! நலம் பெறுக!

அன்பன்,

K. P. சுந்தரம்,

(அரசாங்கச்சான்று பெற்ற) தையல் தொழில் வல்லுநர்

148, புரசைவாக்கம் ஹைரோடு; சென்னை-7.

தி. மாவட்ட மாநாடுகள்

திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் இரண்டாவது சமூக சீர்திருத்த மாநாடும்-அரசியல் மாநாடும், லால்குடியில், 25, 26-4-53 சனி, ஞாயிறுநாட்களில், சீரும் சிறப்பும் எய்த, பூரிப்பும் பொலிவும் மிக, அறிவுக்கு விருந்தாய், ஆற்றலுக்கு எடுத்துக் காட்டாய்க், கழகத் தோழர்களுக்குக் களிப்பாய்ப், பாதுமக்களுக்கு வியப்பாய், மாற்றார்க்கு அருட்சியாய், அரசியலார்க்கு எச்சரிக்கையாய் இனிது நடந்தேறியிருக்கின்றன.

மாநாட்டில் கலந்து கொண்ட கழகத் தோழர்கள் அனைவரும் காட்டிய ஊக்கமும், உணர்ச்சியும், பொறுப்பும், பொறுமையும் பாராட்டி வியக்கத் தக்கனவாகும். அமைக்கப் பட்டிருந்த இடம் போதாத வகையில் வெள்ளம், போல் மக்கட் கூட்டம் திரண்டு நின்ற காட்சி, கண்ணுக்குக் கவர்ச்சியாகவும், கருத்துக்கு வியப்பாகவும் அமைந்திருந்தது.

மூவலூர் மூதாட்டியார் இராமாமிர்தத்தம்மையார் அனுபவம் பொதிந்த அழகிய திறப்புரை ஆற்றி மாநாட்டைத் திறந்து வைக்க, தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் "பாண்டியனார்" வில்லுப்பாட்டு இசைக்க, பின் நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி கலைக்கண்காட்சியைத் திறந்துவைக்க, தோழர் ஏ. பி. தர்மலிங்கம் அவர்கள் வரவேற்புரை நல்கித் தோழர்

சமூக மாநாட்டுத் தலைவர்

பூவாளூர், அ. பொன்னம்பலனார்

அ. பொன்னம்பலனார் அவர்களைத் தலைமை தாங்கும்படி கேட்டுக்கொள்ள, தோழர்கள் தாமரைச் செல்வன், என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத், இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் வழிமொழிய, தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் அரிய வீரமுன்னுரை நிகழ்த்த, தோழர்கள் க. அன்பழகன், தில்லைவில்லாளன், தாமரைச் செல்வன், அருண்மொழி, எஸ். கே சாமி, சத்தியவாணிமுத்து, இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் பல்வேறுபொருள்கள் குறித்துச் சொற்பொழிவாற்ற, தலைவர் அவர்களின் அறிவுரையோடு கூடிய முடிவுரையுடன் சமுதாய சீர்திருத்த மாநாடு சிறப்பாக முடிவடைந்தது. கட்டுக்கடங்காத பெருங்கூட்டம் காரணமாக நாடகம் நடத்துவது நிறுத்தப்பட்டது.

ஞாயிறு காலை 10 மணி அளவிற்கு இசை முரசு தோழர் ஹனிபா அவர்களின் இன்னிசையோடு ஆரம்பித்த அரசியல் மாநாடு, தோழ[illegible] ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் கொடியேற்[illegible] வைக்க, தோழர் கே. ஏ. மதியழகன் அவர்க[illegible] புள்ளி விவரங்களோடு கூடிய ஆராய்ச்சி மிக்[illegible] அரிய உரையாற்றி மாநாட்டைத் திறந்[illegible] வைக்க, தோழர் ஏ. பி. தர்மலிங்கம் வரவே[illegible] புரை கூறி தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவ[illegible] களைத் தலைமை ஏற்கும்படி கேட்டுக் கொள்[illegible] தோழர்கள் கே. கே. நீலமேகம், இளம்வழு[illegible]

சமூக மாநாட்டுத் திறப்பாளர்

மூவலூர், ஆர், ராமாமிர்தத்தம்மையார்

கண்ணதாசன், எஸ். அப்பாவு, இரா. நெடுஞ்செழியன், அ. பொன்னம்பலனார் ஆகியோர் வழி மொழிய, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமை தாங்கி, அரசியல் சூழ்நிலையை அழகுபடவும், தெளிவு படவும், வீரச் சுவை மிளிர தலைமையுரை ஆற்ற, பிற்பகலில் தோழர்கள் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., ராஜா சிதம்பரம் எம். எல். ஏ., பழனியாண்டி எம். எல். ஏ, நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், சிவாஜி கணேசன், என். எஸ். இளங்கோ, ஏ. கே. வேலன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, மு. கருணாநிதி, இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் பல பொருள்கள் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்த, தலைவர் தீர்மானங்களை நிறைவேற்ற, அறிஞர் அண்ணா அவர்கள் இரண்டு நாட்கள் நிகழ்ச்சிகள் பற்றியும், டால்மியாபுர போராட்ட முறை பற்றியும், கழகத்தோழர்கள் கடைபிடிக்க வேண்டிய கட்டுப்பாடு, ஒழுங்கு பொறுப்புணர்ச்சி பற்றியும் கூறி அழகான முறையில் இறுதிக் கட்டத்தை நிறைவேற்ற, தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூற இனிது முடிவெய்தியது.

இரங்கல் தீர்மானம் உள்பட கழகம்—திருச்சி மாவட்டம்—சென்னை அரசு—இந்தியப் பேரரசு பற்றிய பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் குறிப்பிடக் கூடிய முக்கிய தீர்மானமும், மாநாட்டை என்றென்றும் நினைவுபடுத்தும் தீர்மானமும் 'டால்மியாபுரப் போராட்டம்' பற்றியதாகும்.

★

அரசியல் மாநாட்டுத்

தலைவர்

ஈ. வெ. கி. சம்பத்

★

தீர்மானம்:—“தென்னாட்டு வளப்பத்தில் ஒன்றான சிமெண்டைத், தனது வளத்துக்காகப் பயன்படுத்திச் சுரண்டி வாழும் வடநாட்டு டால்மியாவானவர், சிமெண்ட் விளையும் இடமான 'கள்ளக்குடி'யைவட நாட்டு ஆதிக்கத்தின் அறிகுறியாக 'டால்மியாபுரம்' என்று மாற்றிவைத்திருப்பதானது திராவிடர்களை அவமானம் செய்வதாகும். அதை எடுத்துக்கூறி டால்மியாபுரம் என்கிற பெயரை நீக்கிவிட்டு, அந்த ஊருக்கு இயற்கையான பெயராகிய 'கள்ளக்குடி' என மாற்ற வேண்டுமெனக் கிளர்ச்சி துவக்கவும், தேவைப்பட்டால் நேரடி நடவடிக்கையில் ஈடுபடவும் இம்மாநாடு தீர்மானிப்பதுடன், இதனை நடத்திச்செல்ல, திருச்சி மாவட்டக்குழு தனிக்குழு அமைத்துக்கொள்ள அனுமதிப்பதென்றும், குழுவுக்குத்தலைமை வகிக்கக் கருணாநிதியைக் கேட்டுக்கொள்வதென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.”

டால்மியாபுரப் போராட்டம், வடவரின் ஆணவ-ஆதிக்க-வடநாட்டுப் படையெடுப்பை எதிர்ப்பதன் அறிகுறியாகும். இது ஒரு எடுத்துக்காட்டு! திராவிடரின் உரிமை வேட்கையை இந்தியப் பேரரசினர்க்கு-வடநாட்டு வணிகக் கோமான்களுக்கு-சென்னை ஆட்சியாளர்க்கு-பொதுமக்களுக்கு அறிவுறுத்தும் அரிய அறிகுறி, இப்போராட்டம்! போராட்டம் வெற்றி பெற கட்டிளங்காளைகள் எல்லோரும் களம் நோக்கிப் புறப்படுவோமாக!

அரசியல் மாநாட்டுத் திறப்பாளர்

கே. ஏ. மதியழகன் பி. ஏ.

தையற் கலை

கே. பி. சுந்தரம், G.C.T.

D. B. காலர் பிளவுஸ்

...த பிளவுஸ் முன்பக்கத் திறப்பு ஒன்றின் ... ஒன்று வளர்ந்தும், மூன்று பட்டன் ...ாயும், (காஜா) பட்டனும் கொண்டது. இதற்கு முழு நீளக் கையும், அரை நீளக் கையும் அமைக்கலாம். கைகளின் விளக்கம், 12-ம் இதழிலும், 13-ம் இதழிலும் காணவும்.

அளவுகள்

இடுப்புவரை முதுகு நீளம்	$14\frac{1}{2}$	அங்.
முழு நீளம்	17	,,
பாதித்தோள்	$6\frac{1}{2}$	,,
மார்புச் சுற்று அளவு	34	,,
இடுப்புச் சுற்று அளவு	27	,,

1-ல் இருந்து 0 வரை $17\frac{1}{2}$ அங்.
(முழு நீளம் + $\frac{1}{2}$ அங்.)
2-ல் இருந்து 0 வரை $14\frac{3}{4}$ அங்.
(இடுப்புவரை முதுகு நீளம் + $\frac{1}{4}$ அங்.)
3-ல் இருந்து 0 வரை $7\frac{1}{4}$,,
($\frac{1}{4}$ மார்பளவில் $1\frac{1}{4}$ அங். குறைவு)
4-ல் இருந்து 0 வரை 1 அங்.
5-ல் இருந்து 0 வரை $2\frac{1}{4}$ அங்.
($1/8$ மார்பளவு + $\frac{1}{2}$ அங்.)
6-ல் இருந்து 0 வரை $6\frac{3}{4}$,,
(பாதித்தோள் + $\frac{1}{4}$ அங்.)
7-ல் இருந்து 6 வரை $\frac{3}{4}$,,
8-ல் இருந்து 6 வரை நேர்கோடு இணைக்க.
9-ல் இருந்து 3 வரை $9\frac{3}{4}$,,
($\frac{1}{4}$ மார்பளவு + $1\frac{1}{4}$ அங்.)
10-ல் இருந்து 2 வரை $9\frac{3}{4}$ அங்.
11-ல் இருந்து 1 வரை $9\frac{3}{4}$,,
12-ல் இருந்து 11 வரை $\frac{1}{2}$,,
13-ல் இருந்து 10 வரை $\frac{1}{4}$ அங்.
14-ல் இருந்து 18 வரை 20 அங்.
(முழுநீளம் + 3 அங்.)
15-ல் இருந்து 14 வரை $7\frac{1}{4}$ அங்.
($\frac{1}{4}$ மார்பளவில் $1\frac{1}{4}$ அங். குறைவு.)
15-ல் இருந்து 9 வரை 10 அங்.
($\frac{1}{4}$ மார்பளவு + $1\frac{1}{2}$ அங்.)
16-ல் இருந்து 14 வரை $14\frac{3}{4}$,,
16-ல் இருந்து 10 வரை 10 ,,
17-ல் இருந்து 14 வரை $17\frac{1}{2}$,,
17-ல் இருந்து 11 வரை 10 ,,
18-ல் இருந்து 19 வரை படத்தில் உள்ளபடி வளைவாக இணைக்கவும்
19-ல் இருந்து 11 வரை $\frac{1}{2}$ அங்.
(19, 18 இணைப்பு)
20-ல் இருந்து 10 வரை $\frac{3}{4}$,,
21-ல் இருந்து 14 வரை 3 ,,
($1/8$ மார்பளவு + $\frac{3}{4}$ அங்.)
22-ல் இருந்து 14 வரை 7 ,,
(பாதித்தோள் + $\frac{1}{2}$ அங்.)
23-ல் இருந்து 22 வரை $\frac{3}{4}$ அங்.
24-ல் இருந்து 22 வரை நேர்க்கோடு இணைக்க
25-ல் இருந்து 15 வரை $2\frac{1}{4}$ அங்.
($1/8$ மார்பளவு)
26-ல் இருந்து 18 வரை $2\frac{1}{4}$ அங்.
($1/8$ மார்பளவு)
27-ல் இருந்து 25 வரை $2\frac{1}{4}$,,
($1/8$ மார்பளவு)
28-ல் இருந்து 27 வரை $3\frac{1}{4}$,,
29-ல் இருந்து 28 வரை $3\frac{1}{4}$,,

தொடரும்



Regd. No. M [illegible]

பரிமளம் பிக்சர்ஸ்

சொர்க்கவாசல்

கதை, வசனம்.. அறிஞர் அண்ணா

இனிய இசையுடன்... கவர்ச்சியான காட்சிகளுடன்
நேர்த்தியான நடிப்புடன்:.... அழகு நடையுடன்...

கோதானப்புரட்டு	பழந்தமிழர் நெறி
பழங்கால விளக்கம்	கலைவலையுடன், மதம்
அருள்விற்கும் அக்ரமம்	அறநெறியின் மாண்பு
போலிசாதுவின் மோசடி	அறப்போர் உள்ளம்
காதலும் கடமையும்	மக்களாட்சி மாண்பு

எனும் பிரச்சினைகளைப் புத்துலக விருந்தாக்கித் தருகிறது.
பார்க்கப் பார்க்கப் பூரிப்புடன் பண்பும் பாடமும் தரும் பேசும் படம்!
அறிவியக்கம் தரும் அரிய விருந்து!

மகிழ்ச்சி பொங்கும்! மதி துலங்கும்!

சொர்க்கவாசல்

சோபிதத்தை சிறப்பிக்க

K.R.ராமசாமி — பத்மினி — அஞ்சலி

[illegible]ited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A.
[illegible]CHAKAM at 26, N[illegible] St, Mannadi, MADRAS-1